உ

வெற்றிவேலுற்றதுணை.

நக்கீரதேவர்

அருளிச்செய்த

திருமுருகாற்றுப்படை.

இஃது

நச்சினார்க்கினியாரியற்றியவுரையுடன்.

புதுவை

குவர்ன்மாவச்சுக்கூடத் தமிழ்த்தலைவராகிய

சுப்பராயமுதலியாரால்

பார்வையிடப்பட்டு

தமது

பாரதிவிலாசவச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி௵ மாசிமீ 1853

இதன்விலை அணா ௮

உ

வெற்றிவேலுற்றதுணை.

திருமுருகாற்றுப்படை

மூலமும் உரையும்.

முதலாவது.

திருப்பரங்குன்றம்.

உலகமுவப்ப - வலனேர்புதிரிதரு, பலர்புகழ்ஞாயிறு - க
டற்கண்டாஅங், கோவறவிமைக்குஞ் - சேண்விளங்கவிரொ
ளி, யுறுநர்த்தாங்கிய-மதனுடைநோன்றாட், செறுநர்த்தேய்
த்த செல்லுறழ்தடக்கை, மறுவில்கற்பின்-வாணுதல்கணவன்,
கார்கோண்முகந்த-கமஞ்சூன்மாமழை, வாள்போழ்விசும்பி
ன்-வள்ளுறைசிதறித், தலைப்பெயறலைஇய- தண்ணறுங்கானத்
திருள்படப்பொதுளிய-பராரைமராஅத், துருள்பூந்தண்டா
ர்-புரளுமார்பினன், மால்வரைநிவந்த- சேணுயர்வெற்பிற், கி
ண்கிணிகவைஇய-வொண்செஞ்சீறடிக், கணைக்கால்வாங்கிய
நுசுப்பிற்பணைத்தோட், கோபத்தன்ன-தோயாப்பூந்துகிற், ப
ல்காசுநிரைத்த-சில்காழல்குற், கைபுனைந்தியற்றாக்-கவின்பெறு
வனப்பி, னாவலொடுபெயரிய-பொலம்புனையவிரிழை, சேணி
கந்துவிளங்குஞ்-செயிர்தீர்மேனித், துணையோராய்ந்த-விணை
யீரோதிச், செங்கால்வெட்சிச் - சீறிதழிடையிடுபு, பைந்தாட்
குவளைத்-தூவிதழ்கிள்ளித், தெய்வவுத்தியொடு-வலம்புரிவயின்
வைத்துத், திலதந்தைஇய-தேங்கமழ்திருநுதல், மகரப்பகுவா
ய்-தாழமண்ணுறுத்துத், துவரமுடித்த-துகளறுமுச்சிப், பெ
ருந்தண்சண்பகஞ்-செரீஇக்கருந்தகட், டுளைப்பூமருதி-னொ
ள்ளிணரட்டிக், கிளைக்கவின்றெழுதரு- கீழ்நீர்ச்செவ்வரும்பி
னைப்புறுபிணையல்-வளைஇத்துணைத்தக, வண்காதுநிறைந்த-பி

ண்டியொண்டளிர், நுண்பூணகந்-திளைப்பத்திண்காழ், நறு
ங்குறடுரிஞ்சிய-பூங்கேழ்த்தேய்வை, தேங்கமழ்மருதிணர்-க
டுப்பக்கோங்கின், குவிமுகிழிளமுலைக்-கொட்டிவிரிமலர்,வே
ங்கைநுண்டா-தப்பிக்காண்வர, வெள்ளிற்குறுமுறி-கிள்ளுபு
தெறியாக், கோழியோங்கிய-வென்றடுவிறற்கொடி, வாழிய
பெரிதென்-றேத்திப்பலருடன் சீர்திகழ்சிலம்பகஞ்-சிலம்பப்
பாடிச், சூரரமகளி-ராடுஞ்சோலை, மந்தியுமறியா-மரன்பயி
லடுக்கத்துச், சுரும்புமூசாச்-சுடர்ப்பூங்காந்தட், பெருந்த
ண்கண்ணி-மிலைந்தசென்னியன், பார்முதிர்பனிக்கடல்-கலங்
கவுள்புக்குச், சூர்முதறடிந்த-சுடரிலைநெடுவே, லுலறியகது
ப்பிற் பிறழ்பற்பேழ்வாய்ச், சுழல்விழிப்பசுங்கட்-சூர்த்தநோ
க்கிற், கழல்கட்கூகையொடு-கடும்பாம்புதூங்கப், பெருமு
லையலைக்குங்-காதிற்பிணர்மோட், டுருகெழுசெலவி-னஞ்சுவரு
பேய்மகள், குருதியாடிய-கூருகிர்க்கொடுவிரற், கண்டொட்
டுண்ட-கழிமுடைக்கருந்தலை,யொண்டொடித்தடக்கையி-னே
ந்திவெருவர, வென்றடுவிறற்களம்-பாடித்தோள்பெயரா, நி
ணந்தின்வாய-டுணங்கைதூங்க, விருபேருருவி-னொருபேரி
யாக்கை, யறுவேறுவகையி னஞ்சுவரமண்டி, யவுணர்நல்வ
லமடங்கக்கவிழிணர், மாமுதறடிந்த-மறுவில்கொற்றத், தெ
ய்யாநல்லிசைச்-செவ்வேற்சேஎய், சேவடிபடருஞ்-செம்ம
லுள்ளமொடு, நலம்புரிகொள்கைப்-புலம்பிரிந்துறையுஞ்,
செலவுநீநயந்தனை-யாயிற்பலவுட, னன்னர்நெஞ்சத்-தின்னி
சைவாய்ப்ப, வின்னேபெறுதிநீ-முன்னியவினையே, செருப்
புகன்றெடுத்த-சேணுயர்நெடுங்கொடி, வரிப்புனைபந்தொ
டு-பாவைதூங்கப், பொருநர்த்தேய்த்த-போரருவாயிற், றிரு
வீற்றிருந்த-தீதுதீர்நியமத்து, மாடமலிமறுகிற்-கூடற்குடவ
யி,னிருஞ்சேற்றகல்வயல்-விரிந்துவாயவிழ்ந்த,முட்டாட்டாம
ரைத்-துஞ்சிவைகறைக், கட்கமழ்நெய்த-லூதியெற்படக், க
ண்போன்மலர்ந்த-காமர்சுனைமலர, வஞ்சிறைவண்டி-னரிக்க
ணமொலிக்குங், குன்றமர்ந்துறைதலு-முரியனதாஅன்று.(க

இதனது பதவுரை.

உலகமுவப்ப - என்பது - [உலகமென்பது முதல்கணவனென்னுந்துணையுமொருதொடர்] உலகமென்பது-பலபொருளொருசொல்லாய் நிலத்தையுமுயிர்களையுமொழுக்கத்தையுமுணர்த்திநிற்குமேனும்-ஈண்டுவப்பவென்றதனான் மன்னிடத்துவாழுஞ் சான்றோர்களையேயுணர்த்திற்று — ஏர்புவலன்றிரிதரு- எழுந்து மாமேருவை வலமாகத் திரிதலைச்செய்யும்—பலர்புகழ்ஞாயிறு - எல்லாச்சமயத்தாரும் புகழுஞாயிற்றை—கடற்கண்டாங்கு - கடலிடத்தேகண்டாற்போல — இதுவினையெச்சவுவமம் விரவியும் வருஉமரபினவென்பவென்பதனாற்றொழிலுவமமும்; வண்ணவுவமமும், பற்றிவந்தது. எனைஞாயிறிருளைக்கெடுக்குமாறுபோலத்தன்னைமனத்தானோக்குவார்க்குமாயையைக்கெடுத்தலிற்றொழிலுவமமுந், தன்னைக்கட்புலனாகநோக்குவார்க்குக்கடலிற்பசுமையுஞாயிற்றின்செம்மையும்போல மயிலிற்பசுமையுந் திருமேனியிற்செம்மையுந்தோன்றலின் வண்ணவுவமமுங்கொள்ளக்கிடந்தவாறுகாண்க. ஓவறவிமைக்குமவிரொளி - இருவகையிரதியங்களுந்தாஞ்செல்லுதற்குரிய பொருள்கண்மேற்சென்று தங்குதலில்லையாகவிமைத்துப் பார்த்தற்குக் காரணமாக விளங்குகின்றவொளி — ஓவென்பதோரெழுத்தொருமொழியாகிய தொழிற்பெயர். இமைத்தல் - கண்களினிதழ்களிரண்டினையுங் குவித்தல். அது நுதலிமைபாநாட்டமென்பதனானுணர்க. சேண்விளங்கொளி - கட்புலனுக்நோக்குவார்கண்ணிடங்களெல்லாவற்றினுஞ்சென்றுவிளங்குகின்றவொளி— உவப்பவெழுந்துதிரியுஞாயிற்றைக் கடற்கண்டாங்கவிர்கின்றவொளியெனத்தொழிலுவமங்கொள்ளுங்கால் வினைமுடிக்க. இனி உவப்பவெழுந்துதிரியுஞாயிற்றைக்கடற்கண்டாங்கு சேண்விளங்குமொளியென வண்ணவுவமங்கொள்ளுங்கால் வினைமுடிக்க. உறுநர்த்தாங்கிய மதனுடைநோன்றாள் - தன்னைச்சேர்ந்தவர்களுடைய வினையைப்போக்கியவரைத் தாங்கிய வலியுடை

யையுடைத்தற்குக் காரணமாகியவலியினையுடையதாள் — செ
றுநர்த்தேய்த்தசெல்லுறழ்தடக்கை- அழித்தற்குரியாரையழித்
தவிடியைமாறுபட்டபெருமையினையுடையகை— மறுவில்க
ற்பின் வாணுதல்கணவன் - மறக்கற்பில்லாத வறக்கற்பினையு
டைய விந்திரன்மக டெய்வயானையார்கணவன் — இப்பெய
ரமுற்கூறினார் படைத்தற்குங் காத்தற்கு மழித்தற்குமுரிமை
தோன்ற வொளியினையுந் தாளினையுங் கையினையுமுடைய கணவ
னெனமுடிக்க· கணவனென் பதீண்டுமுருகனென்னுந் துணை
யாய்நின்றது [கார்கோண் முதன்மார்பினனென்னுந் துணையு
மொருதொடர்] கார்கோண்முகந்தகமஞ்சூன்மாமழை - கார்
முகக்கப்படுதலிற் கடலைக்கார்கோளென் றதாகுபெயர்· கட
லிலேமுகந்ததனாலுண்டாகிய நிறைவினையுடைத்தாகியசூலினை
யுடைய பெருமையையுடையமழை — வாள்போழ்விசும்பி
ன்வள்ளுறைசிதறி - திங்களுஞாயிறு மிருளைநீக்குமாகாய
த்தே பெருமையையுடையதுளியை முற்படச்சிதறி— வா
ளாகுபெயர்· தலைப்பெயறலைஇய தண்ணறுங்கானத்து - கா
ர்காலத்து முதற்பெயலைச் சொரிந்ததண்ணிய நறியகாட்
டிடத்து—இருள்படப்பொதுளிய பராரைமராத்து - இரு
ட்சியுண்டாகத்தழைத்த பரியவடியினையுடைய செங்கடம்பி
னது — பராரை பண்புத்தொகைச் சந்திமுடிபுவேற்றுமை
யென்றுணர்க· உருள் பூந்தண்டார் புரளுமார்பினன் - தே
ருருள்போலும் பூவாற்செய்த குளிர்ந்தமாலையசையு மார்பி
னையுடையவன் — உருள்பூ வுவமத்தொகையாகவி னுருள்பூ
வுருட்பூவென வுறழ்ச்சிமுடிபெய்தும் இனியுருளும்பூ வுரு
ண்டபூவென வினைத்தொகையுமாம் மழைசிதறித் தலைஇயகா
னத்து மராத்துத்தார்புரளுமார்பினனெனமுடிக்க· இதுபோ
கத்திற்குரியதா ரிதனைமுற்கூறினார் [வாணுதல்கணவனெ
ன்பதனைநோக்கி மால்வரைமுகற்சென்னியனென்னுந் து
ணையுமொருதொடர்] மால்வரைநிவந்தசேணுயர்வெற்பில் -
பெருமையினையுடைய மூங்கில்வளர்ந்ததேவருலகிற்செல்லவு

யர்ந்தமலையில் — வரைகளையுடைமையின் வரையாயிற்று
பெயராய். பெரியவரைவயிரங்கொண்டென்றார்பிறரும் இ
னி திருமால்போலுங் குவடுகளோங்கிய வெற்பென்றுமாம்
மாயோனன்ன மால்வரைக்கவானென்றார்பிறரும். கிண்கி
ணிகவைஇய வொண்செஞ்சீறடி - சிறுசதங்கைசூழ்ந்தவொ
ள்ளிதாகிய சிவந்தசிறியவடியிணையும்—கணைக்கால் - திரண்ட
காலிணையும்—வாங்கிய நுசுப்பில் - வளைந்து நுடங்கியவிடையி
னையும்—பணைத்தோள் - பெருமையையுடைய தோளிணையும்
மூங்கில்போலுமென்றுமாம். கோபத்தன்ன தோயாப்பூந்
துகில் - இந்திரகோபத்தையொத்த நிறம்பிடியாத வியல்பா
ன சிவப்பாகிய பூந்தொழிலையுடைய துகிலிணையும்— தெ
ய்வத்தினாணையாற்றானே சிவந்திருத்தலிற் றோயாத்துகிலென்
றார். பல்காசுநிரைத்த சில்காழல்குல் - பலமணிகள்கோத்த
விரண்டுவடமாகிய காஞ்சியையணிந்த வல்குலிணையும் — அ
து - எண்கோவைமேகலைகாஞ்சியிருகோவை, பண்கொள்கலா
பமிருபத்தொன்று - கண்கொள் பருமம்பதினாறுமுப்பத்திர
ண்டு. விரிசிகையென்றுணரற்பாற்று-என்றதனானுணர்க. கை
புனைந்தியற்றாக் கவின்பெறுவனப்பின் - ஒருவர் கைபா
ற்சிறப்பித்துப் பிறப்பியாத வழகைத் தமக்கியல்பாகப் பெ
றுகின்றவழகினையும் — என்றது மாநுடமகளிர்க்குத் தாய
ர்பலருங்கைசெய்து பிறப்பிக்குமழகன்றி யிவர் தெய்வத்தன்
மையா னியல்பாகப்பெற்ற வழகையுடைய ரென்றவாறு
நாவலொடுபெயரிய பொலம்புனையவிரிழை - சாம்பூநதமெ
ன்று நாவலோடடுத்துப் பெயர்பெற்ற பொன்னானிரு
மித்து விளங்குகின்ற பூணினையும் — பொலம் பொன்னெ
ன்கிளவியென்பதனான்முடிக்க. சேணிகந்துவிளங்குஞ் செ
யிர்தீர்மேனி - சேய்நிலத்தைக் கடந்துவிளங்குங் குற்றந்தீ
ர்ந்தநிறத்தையும்—துணையோராய்ந்த விணையீரோதி - ஆயத்
தார் நன்றென் றாராய்ந்தகடையொத்த நெய்ப்பினையுடை
யமயிரிலே—செங்கால்வெட்சிச் சீறிதழிடைப் பைந்தாட்கு

வளைத் தூவிதழ்கிள்ளியிடுபு - சிவந்ததாளையுடைய வெட்சியி
னுடைய சிறியபூக்களை விடுபூவாகத்தூவி யதற்கு நடுவே ப
சுத்ததண்டினையுடையகுவளையினது தூயவிதழ்களைக் கிள்ளி
யிட்டு—தெய்வவுத்தியொடு வலம்புரிவயின்வைத்து - சீதேவி
யென்னுந் தலைக்கோலத்துடனே வலம்புரிவடிவாகச் செய்த
தலைக்கோலத்தையும் வைத்தற்குரியவிடத்தே வைத்து — தில
தந்தைஇய தேங்கமழ்திருநுதன் மகரப்பகுவாய் தாழமண்
ணுறுத்து - திலதமிட்டமணநாறுகின்ற வழகினையுடையநெற்
றியின்கண்ணே சுறவின தங்காந்தவாயாகப்பண்ணின தலை
க்கோலந் தங்கப்பண்ணி — மகரப்பகுவாயாகுபெயர். ம
ண்ணுறுத்தலையாகுதி மண்ணியென்றாற் போலக்கொள்க இ
ணிமண்ணுறுத்துத் துவரமுடித்தவெனமேலே கூட்டிக்கழு
வி முடித்தவென்றுமாம்— துவரமுடித்த துகளறுமுச்சிப்
பெருந்தண் சண்பகஞ்செரிஇ - வேண்டுவன கூட்டிமு
ற்றமுடித்த குற்றமறுகின்ற கொண்டையிலே பெரிய குளிர்
ந்த சண்பகப்பூவைச்செருகி — கருந்தகட் டுளைப்பூமருதி
னொள்ளிணரட்டி - கரியபுறவிதழினையு மேலிற்றூயவிதழி
னையுமுடைத்தாகிய பூக்களையுடையமருதின தொள்ளியபூங்
கொத்துக்களை யதன்மேலே யிட்டு— இதுமுதலாகியபொ
ருட்கேற்ற வடையடுத்துநின்றன — கிளைக்கவின்றெழுத
ரு கீழ்நீர்ச்செவ்வரும் பிணைப்புறுபிணையல்வளைஇ - பச்
சென்ற வரும்புகளினின்று மேலேபோந் தழகுபெற்றுத்
தோன்றுகின்ற நீர்க்கீழ்நின்ற சிவந்தவரும்பைக் கட்டுதலு
றுகின்றமாலையை வளையவைத்து — கவினென்னும்பண்ப
டியாகக் கவின்றென்னுந் தொழில்பிறந்தது கீழ்நீர் நீர்க்கீ
ழென்னு மிலக்கணத்தோடு பொருந்திய மரூஉ அது மிகச்
சிவத்தலி னுருப்பனைக்குங்கொள்வர் — வண்காது துணைத்தகநி
றைந்த பிண்டியொண்டளிர் நுண்பூணாகந்திளைப்ப - வளவி
யகாதிலே தம்மிலொத்தற்குப் பொருந்தவிட்டுநிறைந்தபிண்
டியினதொள்ளிய தளிர் நுண்ணியபூணினையுடைய மார்பிட

த்தேயமைசயாநிற்க—திண்காழ் நறுங்குறடுரிஞ்சிய பூங்கேழ்த்தேய்வை தேங்கமழ்மருதிணர் கடுப்பக்கோங்கின் குவிமுகிழிளமுலைக்கொட்டி - திண்ணியவயிரத்தினையுடைய நறியசந்தனத்தட்டையுரைத்த பொலிவினையுடைய நிறத்தையுடைத்தாகிய குழம்பை மணநாறுகின்ற மருதம்பூவை யப்பியொப்பக்கோங்கினது குவிந்தவரும்பை யொத்த விளையமுலையிலேயப்பி — மருதிணர்நிறத்திற்குவமம் விரிமலர் வேங்கைநுண்டாதப்பி - அவ்வீரம் புலர்வதற்குமுன்னே விரிந்த மலரையுடைய வேங்கைகட பூவினது நுண்ணியதாதையு மங்கேமேல யப்பி— வெள்ளிற்குறுமுறி கிள்ளுபுகாண்வரத்தெறியா-விளவினது சிறியதளிரைக்கிள்ளியழகுபெற வொருவர்மேலொருவர் தெறித்துத் தப்பாமற்பட்டம்போது—வென்றடுவிறற்கோழியோங்கிய கொடி பெரிதுவாழ்கவென்றேத்தி - அஞ்சியா தெதிர்நின்றடுகின்ற வெற்றியையுடையகோழிமேலாய்நின்றகொடி நெடுங்காலம் வாழ்வதாகவென்றுவாழ்த்தி— சூரரமகளிர்பலருடன் - கொடுமையையுடைய தெய்வமகளிர்பலருங்கூடி — சீர்திகழ்சிலம்பகஞ் சிலம்பப்பாடியாடுஞ்சோலை - சீர்மைவிளங்குகின்ற மலையிடமெல்லா மாரவாரிக்கப்பாடியாடுஞ் சோலையினையுடைய— மந்தியுமறியாமரம்பயிலடுக்கத்து மரமேறுந்தொழிற் சிறப்புடையமந்திகளுமரங்களினீட்டத்தாலேறி யறியாத மரநெருங்கினடுக்க மலையிடத்துநின்ற — உப்பமை கிரட்டப்பமை· சுரும்புமூசாச் சுடர்ப்பூங்காந்தட் பெருந்தண்கண்ணி மிலைந்தசென்னியன் - பிள்ளையார் விரும்புதலிற் சுரும்பினமொய்யாத நெருப்புப்போலும் பூவையுடைய செங்காந்தளினது பெரிய குளிர்ந்த கண்ணியைச்சூடிய திருமுடியையுடையவன் — அடியிணையுங்,காலிணையு,நசுப்பிணையுந்,தோளிணையுந்,தகிலிணையு,மல்குலிணையும்,வட்பிணையு,மிறையிணையு, மேனியிணையுமுடைய சூரரமகளிர்பலருடனே· இடையிட்டு, வைத்துத்,தாழப்பண்ணிச்,செரீஇ,யிணரட்டி,வளைஇத்,திளையாநி

ந்கக்,கொட்டியப்பித்,தெறித்,தேத்திப்,பாடி,யாடுஞ்,சோலை
யையுடைய வெற்பிலடுக்கத்துக் காந்தட்கண்ணி யிலைந்தகொ
ன்னியனென முடிக்க. இதனா லடையாளப்பூக்கூறினார். இ
து வெறியாட்டயர்ந்த காந்தளுமென்பதனா னுணர்க அக
ன்று பொருள்கிடப்பினு மணுகியநிலையினு மியன்றுபொ
ருண்முடியத் தம்பொருளுணர்த்தன் மாட்டெனமொழிப
பாட்டியல்வழக்கே என்னுமாட் டிலக்கணத்தானிப்பாட்டு
கள் பத்துஞ்செய்தார்களாதலி னிவ்வாறே மாட்டிமுடித்த
லியாண்டும் வருமென்றுணர்க பார்முதிர்பனிக்கடல் க
லங்கவுள்புக்கு - பாராகிய நிலமுற்றுப்பெற்ற குளிர்ச்சியை
யுடைய கடறன்னிலை குலையும்படி யுள்ளேசென்று — பார்
டானா. மண்ணிடத்துமுதிர்ந்த கடலென்னுமாம் சூர்முதற
டிந்த சுடரிலைநெடுவேல் - சூரபன்மாவாகிய தலைவனைக்கொ
ன்றவெரிகின்ற விலைத்தொழிலையுடையநெடியவேலாலே — உ
லறியகதுப்பின் - காய்ந்தமயிரினையும் — பிறழ்பல் - நிரை
யொவ்வாத பல்லினையும் — பேழ்வாய் - பெருமையையுடை
யவாயினையும் — சுழல்விழிப்பசுங்கண் - கோபத்தாற் சுழலு
ம் விழியையுடைய பசியகண்ணினையும் — சூர்த்தநோக்கின் -
கொடுமைசெய்த பார்வையினையும் — கழல்கட்கூகையொடு
கடும்பாம்பு தூங்கப் பெருமுலையலைக்குங்காதின் - பிதுங்கிய
கண்ணையுடைய கூகையோடே கடியபாம்புதூங்குதலாலே
பெரியமுலையை வருத்துகின்ற காதினையும் — பிணர்மோட்
டு - சருச்சரையையுடைய பெரியவுடம்பினையும் — மோடு
வயிறுமாப். உருகெழுசெலவின் - கண்டாருட்குதல் பொரு
ந்துநடையினையும் — அஞ்சுவருபேய்மகள் - கண்டார்க்கச்
சந்தோன்றுகின்ற பேயாகியமகள் — குருதியாடிய கூருகிர்
கொடுவிரற் கண்டொட்டுண்ட கழிமுடைக்கருந்தலை - உதி
ரத்தையளைந்த கூரியவுகிரினையுடைய கொடியவிரலாலே க
ண்களைத்தோண்டி யுண்ணப்பட்ட மிக்க முடைநாற்றத்தை
யுடைய கரியதலையை — இனித்தொட்டென்பதனை வினையெ

ச்சமாக்கசாது தொழிற்பெயராக்கிக் கண்டோண்டுதலுண்ட
வென்று கூறலுமாம். ஒண்டொடித்தடக்கையினேந்தி - ஒள்
ளிய தொடியினையுடைய பெருமையையுடைய கையிலேயெ
டுத்து— வெருவர வென்றடுவிறற்களம்பாடி - அவுணர்க்கச்
சந்தோன்ற வஞ்சியாதெதிர்நின்று கொல்கின்ற வெற்றிக்
களத்தைப்பாடி— தோள்பெயரா - தோளையசைத்து— நி
ணந்தின்வாயள் - நிணத்தைத்தின்ற வாயினையுடையளாய்—
வினையெச்சமுற்று. துணங்கைதூங்க. துணங்கைக்கூத்தா
ட— முடக்கியவிருகைப் பழுப்புடையொற்றத் துடக்கியந
டையது துணங்கையாகும். கழப்புமுழவியவற்றையுடைய
பேய்மகடலையையேந்தி வாயளாய்ப்பாடித் தூங்கவென
முடிக்க. இருபேருருவி னொருபேரியாக்கை - மக்கள்வடி
வும் விலங்கின்வடிவமாகிய விரண்டு பெரியவடிவினையுடை
ய வொன்றாகியபெரியவுடல்— அறுவேறுவகையி னஞ்சு
வரமண்டி. ஆறாகிய வேறுபட்ட கூற்றாலேயச்சந்தோன்
ற மிக்குச்சென்று— என்றதனானே யிறைவனுமையை வ
துவை செய்துகொண்டநாளிலே யிந்திரன்சென்று நீபுண
ர்ச்சிதவிர வேண்டுமென்று வேண்டிக்கொள்ள வவனுமத
ற் குடன்பட்டது தப்பானுசிக் கருப்பத்தை யிந்திரன்
கையிற் கொடுப்ப வதனை யிருடிகளுணர்ந் தவன்பக்கனி
ன்றும் வாங்கித் தமக்குத்தரித்த வரிதாலகயினுமேலே யிறைவன்
கூறாகிய முத்தீக்கட்பெய்ததனைத் தப்பனைவியர் கையிற்
கொடுப்ப அருந்ததியொழிந்த வறுவரும் வாங்கிக்கொ
ண்டு விழுங்கிச் சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பது
மப்பாயலிலே பயந்தாராக வாறுகூறாய் வளர்கின்றகாலத் தி
ந்திரன்றா னிருடிகளுக்குக் கொடுத்த நிலையை மறந்தாண்டு
வந்து வச்சிரத்தானெறிய வவ்வாறுவடிவுமொன்றாயவனுட
னேபொருதவனைக்கெடுத்ததற்பின் சூரபன்மாவைக்கொல்லு
தற் கவ்வாறுவடிவுமாறாகி வேறுபட்ட கூற்றாலே மண்டிச்
சென்றதென் றுபுராணங்கூறிற்று. இதுபாயிரும்பணிக்கட

வென்னும் பரிபாடற் பாட்டானுணர்க. இவ்வாறன்றி வேறு
வேறு புராணங் கூறுவாருமுளர். இனிபயனுடலத்து வேறு
வேறும்வகையிலென்றுமாம். அவுணர்நல்வலமடங்க- அவனை
பொழிந்த வவுணருடைய நல்லவெற்றியில்லையாம்படி மடங்
க —என்றது சுளமடங்கவென்றாற்போலக் கொள்க. கவிழி
ணர்மாமுதறடிந்த- கீழ்நோக்கின பூங்கொத்துக்களையுடைய
மாமரத்தைவெட்டின —என்றது அவுணரெல்லாருந் தம்மு
டனெதிர்ந்தார் வலியிலே பாதிதங்கள் வலியிலே கூடும்படி ம
ந்திரங் கொண்டிருந்து சாதித்ததொருமாவை வெட்டினு
னென்றவாறு. மறுவில் கொற்றத்து- குற்றமில்லாத வெற்றி
யினையும்— எய்யாநல்லிசை- ஒருவராலு மளந்தறியவொண்
ணாநல்ல புகழினையுமுடைய — செவ்வேற்சேய் - செய்யவே
லையுடைய சேய் — எக்காலமும் போர்செய்தலிற் செவ்வே
லென்றார். செய்யவன் சேயெனவிகாரத்தா னீண்டதென்று
மாம் கடல்கலங்கவுள்புக்குச் சூர்முதலுடைய வொருபேரி
யாக்கை யறும்வறுவகையினஞ்சுவரமண்டிச் சென்றும்ப
ய்மக டுணங்கை தூங்கும்படியாக வச்சூர்முதறடிந்தவே
லாலே பின்னு மவுணர்நல்வலமடங்க மாமுதறடிந்த கொற்
றத்தினையு நல்லிசையினையு முடைய சேயெனமுடிக்க. கண
வன் மார்பினன் செனனிபனுப்ப சேயென வொருபொரு
ள்குறித்த வேறுபெயராய் நின்றது. புலம்புரிந்துறையுஞ்
சேவடி - மெய்ஞ்ஞானத்தா னறிதலைக்கைவிட்டுத் தங்குற்றி
ருவடி— திருவடிமேய வீடு யிருக்குமென்றார். அது தென்
னன்பெருந்துறையான் காட்டாதனவெல்லாங்காட்டிச் சி
வங்காட்டித் தாட்டாமரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்
டி யென்பதனானும் பிறருந்திருவடியே கூறுமாற்றானுமு
ணர்க. சேவடிபடரு நலம்புரிகொள்கைச் செம்மலுள்ள
மொடு - அத்திருவடியிற் செல்லுதற்குக் காரணமான நல்வி
னைகளைப் பலபிறப்புக்களினும் விரும்பி நிகழ்த்தின சோட்
பாட்டமேனே தலைமையினையுடைத்தாகிய வுள்ளத்தோடே—

செலவுநீநயந்தனையாயில் - செல்லுஞ்செலவைநீவிரும்பியே
விட்டாயாயின் — நீமுன்னியவினை பலவுடனன்னர்நெஞ்சத்
தின்னிசைவாய்ப்ப—வின்னேபெறுதி - நீமுற்பிறப்பிற் கருதிச்
செய்த நல்வினையாலே வீடுபெறுவார்க் குரியனவாகக்கூறி
ய நற்குணங்கள் பலவுஞ்சேர நன்றாகிய நெஞ்சத்திலுண்
டாகிய வினியவீடுபேற்றைத் தப்பாமலிப்பொழுதே பெறு
வை— செருப்புகன்றெடுத்த சேணுயர்நெடுங்கொடி -
போரைவென்று விருப்பிக்கட்டின சேய்நிலத்தே சென்று
யர்ந்த நெடியகொடிக்கருகே— வரிப்புனைபந்தொடு பா
வைதூங்க - நூலால் வரிந்துபுனையப்பட்ட பந்தும் பாவை
யுமறுப்பாரின்மையிற் றூங்கிவிடும்படி— என்றது ப
கைவரை மகளிராக்கியவர்கொண்டு விளையாடுதற்குத் தூக்கி
ய தன்றவாறு பொருநர்த்தேய்த்த போரருவாயில் - பொ
ருவாரை யில்லையாக்குகையினாலே யெக்காலமும்போர்த்தொ
ழிலரிதாகிய வாயிலினையும்— திருவீற்றிருந்ததீதுதீர்நியமத்
து - திருமகள் வருத்தமின்றியிருந்த குற்றந்தீர்ந்த வங்காடி
த்தெருவினையும்— மாடமலிமறுகிற் கூடற்குடவயின் - மா
டங்கண் மிக்கவேனைத் தெருக்களையுமுடைய மதுரையின்
மேற்றிசையிடத்து— அஞ்சிறைவண்டினரிக்கணம் - அழகி
னையுடைத்தாகிய சிறகையுடைய வண்டினுடைய வழகினையு
டைய திரள்— இருஞ்சேற்றகல்வயல் விரிந்துவாயவிழ்ந்த -
கரிய சேற்றினையுடைய வகன்றவயலிலே முறுக்குநெகிழ்ந்
து பின்பு தாதுமல்லியுந்தோன்ற மலர்ந்த—முட்டாட்டாம
ரைத்துஞ்சி - முள்ளையுடைத்தாகிய தாளையுடைய தாமரைப்
பூவிலே யிராப்பொழுது துயில்கொண்டு — வைகறைக்கட்கம
ழ்நெய்தலூதி - விடியற்காலத்தே தேனூறுகின்ற நெய்தற்
பூவையூதி — எற்பட - ஞாயிறுதோன்றினகாலத்தே— கண்
போன்மலர்ந்த காமர்சுனைமல ரொலிக்குங் குன்றமர்ந்து
றைதலுமுரியன் — கண்ணையொக்கவிரிந்த விருப்பமருவின
சுனைப் பூக்களிலேசென் றாரவாரிக்குந் திருப்பரங்குன்றி

லே நெஞ்சமர்ந் திருத்தனுமுரியன்— உம்மை யெதிரதுத் தழீஇய வெச்சவும்மை. கூடற்குடவயிற் குன்றூ வண்டினரி க்கணந்துஞ்சி யூதியொலிக்குமகுன்று. அஃதாஅன்று - அதுவன்றி— அதாஅன்றெனு அகரமிட்டெழுதுக. இதனைய ன்று வருகாலேயென்பதனுனு மின்றியெனனும் வினையெ ஞ்சிறுதியென்பதனுட் டோன்றியன் மருங்கினென்பதனு னுமுடிக்க.

திருப்பரங்குன்றம் முற்றிற்று.

இரண்டாவது
திருச்சீரலைவாய்.

வைந்நுதிபொருத - வடுவாழ்வரி நுதல், வாடாமாலை - யோ டையொடுதுயல்வரப், படுமணியிரட்டு - மருங்கிற்கடுநடைக் கூற்றத்தன்ன - மாற்றருமொய்ம்பிற், கால்கிளர்ந்தன்ன -வே, ழமேல்கொண், டைவேறுருவிற் - செய்வினைமுற்றிய, முடி யொடுவிளங்கிய - முரண்மிகுதிருமணி, மின்னுறழிமைப்பிற் சென்னிபொற்ப, நகைதாழ்புதுயல்வரூஉம் - வகையமை பொலங்குழை, சேண்விளங்கியற்கை-வாண்மதிகவைஇய, வ கலாமீனி - னவிர்வனவிமைப்பத், தாவில்கொள்கைத் - தந் தொழின்முடிமார், மனனேர்பெழுதரு வாணிறமுகனே, மா யிருஞாலம் - மறுவின்றிவிளங்கப், பல்கதிர்விரிந்தன் -றொ ருமுகமொருமுக, மார்வலரேத்த - வமர்ந்தினிதொழுகிக், கா தலினுவந்து - வரங்கொடுத்தன்றே, யொருமுக, மந்திரவிதி யின் - மரபுளிவழாஅ, வந்தணர்வேள்வியோர்க் - கும்மே யொருமுக, மெஞ்சியபொருள்களை - யேமுறநாடித், திங்க ள்போலத் - திசைவிளக்கும்மே, யொருமுகஞ், செறுநர்த் தேய்த்துச் - செல்சமமுருக்கிக், கறுவுகொணெஞ்சமொடு களம்வேட்டன்றே, யொருமுகங் - குறவர்மடமகள், கொ டிபோனுசுப்பின், மடவரல்வள்ளியொடு - நகையமர்ந்த ன்றே - யாங்கம், மூவிருமுகனு - முறைநவின்றொழுகலி, னு

ரந்தாழ்ந்தவம்பகட்டுமார்பிற், செம்பொறிவாங்கிய - மொய்ம்பிற்சுடர்விடுபு, வண்புகழ்நிறைந்து - வசிந்துவாங்குநிமிர்தோள்,விண்செலன்மரபி - னையர்க்கேந்திய தொருகை, யுக்கஞ்சேர்த்திய, தொருகைநலம்பெறு, கலிங்கத்துக் குறங்கின்மிசை - யசைஇயதொருகை, யங்குசங்கடாவ வொருகை யிருகை, யையிருவட்டமொ - டெஃகுவலந்திரிப்ப, வொருகை மார்பொடுவிளங்க வொருகை, தாரொடுபொலிய - வொருகை கீழ்வீழ்,தொடியொடுமீமிசைக் - கொட்ப வொருகை, பாடின்படுமணி - யிரட்ட வொருகை, நீனிறவிசும்பின் - மலிதுளிபொழிய, வொருகை, வானரமகளிர்க்கு - வதுவைசூட்ட,வாங்கப், பன்னிருகையும் - பாற்படவியற்றி, யந்தரப் பல்லியங் - கறங்கத்திண்காழ், வயிரெழுந்திசைப்ப - வால்வளைஞரல, வுரந்தலைக்கொண்ட - வுருமிடிமுரசமொடு, பல்பொறிமஞ்ஞை - வெல்கொடியகவ, விசும்பாறாக - விரைசெலன்முன்னி, யுலகம்புகழ்ந்த - வோங்குயர்விழுச்சீ, ரலைவாய்ச்சேறலு - நிலைஇயபண்பே,யதாஅன்று.

இதன்பொருள்.

வைந்நுதிமுத லலைவாய்ச்சேறலென்னுந் துணையுமொரு தொடர்] வைந்நுதிபொருத வடுவாழ்வரிநுதல - கூர்மையுடைத்தாகிய தோட்டிவெட்டின வடுவழுந்தின புகரையுடைய மத்தகத்தே— வைந்நுதியாகுபெயர். வாடாமாலையோடையொடுதுயல்வர - பொன்னரிமாலை பட்டத்தோடேகிடந்தசைய— படுமணியிரட்டுமருங்கில் - தாழ்கின்றமணி மாறியொலிக்கின்ற பக்கத்தினையும்— கடுநடை - கடியநடையினையும்— கூற்றத்தன்ன மாற்றருமொய்ம்பின் - கூற்றுவனையொத்த பிறராற்றடுத்தற்கரிய வலியினையுமுடைய— காலகிளர்ந்தன்ன வேழமேல்கொண்டு - ஒடுங்காற் காற்றெழுந்தாலொத்த களிற்றையேறி— மருங்கு முதலியவற்றையு

டைய வெழுத்தை நுதலிலே மாலைபட்டத்தோடேயசையவே
றியென முடிக்க. ஐவேறுருவிற் செய்வினைமுற்றிய முடி
யொடுவிளங்கிய முரண்மிகுதிருமணி - ஐந்தாகியவேறுபட்
ட வடிவினையுடைய முடிக்குச்செய்யுந் தொழிலெல்லா மு
ற்றுப்பெற்ற முடியோடேகூடிவிளங்கிய வொன்றற்கொன்
று மாறுபாடுமிகு மழகினையுடையமணி — ஐவேறுருவு - தா
மமகுடம் பதுமங்கிம்புரி, கோடாமிவை முடிக்கைவ்வுரு
வெ. மின்னுறழிமைப்பிற் சென்னிப்பொற்ப - மின்னொ
டே மாறுபடுகின்ற விளக்கத்தோடே முடியிலே பொலிவு
பெற — நகைதாழ்பு துயல்வருஉம் வகையமை பொலங்கு
ழை - ஒளிதங்கியசையுந் தொழிற்கூறமைந்த பொன்னாற்
செய்த மகரக்குழை — சேண்விளங்கியற்கை வாண்மதிக
வைஇய வகலாமீனினவிர்வனவிமைப்ப - சேய்நிலத்தைச்செ
ன்றுவிளங்குமியல்பினையுடையவொளியையுடையமதியைச்சூ
ழ்ந்துநீங்காத மீன்கள்போலவிளங்குவனவாயொளியைக்கா
லு — மீனுரோகணிமுதலியன வியாழமும் வெள்ளியுமாம்.
தாவில்கொள்கைத் தந்தொழின் முடிமார் - வருத்தமில்லாதவி
ரதங்களையுடைய தவத்தொழிலை முடிப்பாருடைய— மனமே
ர்பெழுதரு வாணிறமுகனே - மனத்திலே பொருந்தித்தோன்
றுகின்ற வொளியையுடைத்தாகிய நிறத்தையுடைய முகங்க
ளிலே — பொற்பவிமைப்ப வெழுதருமுகனென்க. முகனெ
ன்றதாறற்கும் பொது ஒருமுகமாயிருண்ஞால மறுவின்றி
விளங்கப் பல்கதிர்விரிந்தன்று - ஒருமுகம் பெருமையையு
டைத்தாகிய விருட்சியையுடைய வுலகங் குற்றமின்றிவிள
ங்கும்படி பலகிரணங்களையுந் தோற்றுவித்து — ஒருமுகமா
ர்வலரேத்த வமர்ந்தினிதொழுகிக் காதலினுவந்துவரங்கொ
டுத்தன்றே - ஒருமுகந் தன்மேலன்புசெய்தவர்க டுதித்தற்குப்
பொருந்தியவர்க் கினிதாக நடந்தவர்மேற்சென்ற காதலா
லே மகிழ்ந்து வேண்டும்பொருள்களை முடித்துக்கொடுத்த
து — ஒருமுக மந்திரவிதியின் மரபுளிவழாஅ வந்தணர்வே

ள்வியோர்க்கும்மே - ஒருமுகமந்திரத்தையுடைய வேதத்திற்
கூறிய முறைமைதப்பாதவர்தனாலுடையயாகங்களுக்குத்தீ
ங்குவாராதபடி நினையாநிற்கும்—அந்தத்தை யுணவுவாரந்தண
ர் - என்றது வேதாந்தத்தை நோக்குவாரென் றுணர்க. ஒரு
முகமெஞ்சிய பொருள்களை யேமுறநாடித் திங்கள்போலத்
திசைவிளக்கும்மே - ஒருமுகமீண்டு வழங்காதவேதங்களினு
நூல்களினுமுள்ளபொருள்களை யாராய்ந் திருடிகளேமுறு
ம்படி யுணர்த்தித்திங்கள்போலத் திசைகளெல்லாம் விளக்கு
விக்கும்— எமமிரட்டை - கலைநிறைதலிற்றிங்களுவமையாயி
ற்று ஒருமுகஞ்செல்சமமுருக்கிக்கறுவுகொணெஞ்சமொ
டு செறுநர்த்தேய்த்துக் களம் வேட்டன்று - ஒருமுகந் திரு
வுள்ளத்திற் செல்லுகின்ற நடுவுநிலைமையைக் கெடுத்தவர்களை
க் கொல்லவேண்டுமென்று கறுவுதல்கொண்ட திருவுள்ளத்
தோடே செறப்படு மசுரர் முதலியோரைப் பொன்றக் கெ
டுத்துக் களவேள்வியை வேட்டது— சமம் - நடுவுநிலைமை.
அதனைக்கெடுத்தலாவது - தேவரையு மசுரரையு மொப்பக்க
ருதாது தேவரைக்காத் தசுரரை யழித்தல் - ஒருமுகங் குறவர்
மடமகள் கொடிபோ னுசுப்பின்மடவரல் வள்ளியொடு ந
கையமர்ந்தன்றே - ஒருமுகங் குறவருடைய மடப்பத்தையு
டைய மகளாகிய வல்லிபோலு மிடையினையுடைய வள்ளியு
டனே மகிழ்ச்சியைப் பொருந்திற்று— மடவர லலகெய
ணக் கூட்டித்தனக் கோரரியாமை தோன்றுந் தன்மையுடை
த்தாகிய நகையென்று கூறுக - அவளொடு நகையமர்தலின்
றியமை யாமை கூறினார் - காமநுகர்ச்சி யில்லாத விறைவ
னிங்ஙன நகையமர்ந்தா னுலகினில்வாழ்க்கை நடத்தற் கென்
றுணர்க. அது - தென்பாலுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவ
னென்பதனுட் பெண்பாலுவந் திலனேற் பேதாயிருநிலத்
தோர் விண்பாலியோ கெய்தி வீடுவர்காண் சாழலோ. என்
பதனுலுணர்க - விரிந்தன்று - கொடுத்தன்று - வேட்டன்று
நகையமர்ந்தன்று - ஓர்க்கும் - விளக்குமென்பன - முற்று

ச்சொல் - அம்மூவிருமுகனும் - அவ்வாறுமுகமும் — ஆங்
குமுறைநவின்றொழுவின் - அத்தொழில்களிடத்துச் செய்
யுமுறைமைகளைப் பயின்று நடத்துகையினாலே யம்முக
ங்களுக்குப் பொருந்த — ஆரந்தாழ்ந்த வம்பகட்டுமார்பிற்
செம்பொறிவாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு வண்புகழ் நி
றைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள் - பொன்னாற் செய்த
வாரந்தங்கியவழகினையுடைத்தாகிய பெருமையையுடைய மா
ர்பிற்கிடக்கின்ற வுத்தம விலக்கணமாகிய சிவந்த மூன்று வ
ரியினையுந் தன்னிடத்தேவந்து விழும்படி வாங்கிக் கொண்
டதோள் — வாங்கிய வென்றா ரவ்வரி தோளளவும் வந்து கி
டந்தமை தோன்ற - வரையகன் மார்பிடை வரியுமூன் றுள
வேயென்றார் பிறரும் - மொய்ம்பின் வண்புகழ் நிறைந்து
தம்முடைய வலியினாலே பெரியபுகழ் நிறையப்பட்டு — சு
டர்விடுபு வசிந்து வாங்கு தோள் - படைக்கலங்களை யெறி
ந்து பகைவர்மார்பைப் பிளந்தவற்றை வாங்குந்தோள் — சு
டரையுடைய படைக்கலங்களைச் சுடரென்றா ரஃதாகுபெ
யர் நிமிர்தோள் - பெருகுந்தோள் — நிறைந்து நிமிருந்தோ
ளென்க - வசிந்தென்பது பிளந்தென்னும் பொருட்டாதலி
ற் - செய்வதன்றொழிற்குஞ் செய்விப்பதன்றொழிற்கும்
பொது - அசுரர் முதலியோரை யழிக்குங் காலத்துப் பன்
னிருகையினும் படைக்கலமேந்துவனென்றுணர்க - அஃ
து வேறு வகையினஞ்சுவரமண்டியென்பதனானுணர்க
இனியவை போர்செய்யாக் காலத்திங்ஙன மிருக்குமெனவ
வற்றினியல்புகூறுகின்றார் - அத்தோள்களிலொருகையென்
க - இனி மொய்ம்பினையுடைத்தா யொளிவிட்டு நிறைந்து
வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிட நிமிருந்
தோளென்றுரைப்பாருமுளர் - இதற்கு வசிந்தென்பதனைத்
தொடியொடு தொடபமணி யிரட்டவென மேல்வ கூட்டுக
வசிந்து பகைவர் மார்பைப் பிளந்தென்க - வசிந்தென்பத
ற்குப் படைக்கலங்களால் வடுப்பட்டென்று பொருளுரைத்

தவிறைவுறுதலிற் பொருந்தாது. ஒருகையின் செலன்மரபி
னையர்க்குக் கரந்தியது - ஒருகையெக்காலமுமாகாயத்தேயியங்கு
கின்றமுறைமையினையுடைய தேவ விருடிகளுக்குப் பாது கா
வலாகவெடுத்தது— ஒருகையுக்கஞ்சேர்த்தியது - எந்தியகை
க் கிணைந்தகை மருங்கில் வைத்தது - என்றது ஞாயிற்றின்
வெம்மையைப் பல்லுயிரும் பொறுத்தலாற்றுவென்று கரு
தித் தமதருளினாற் சுடரொடு திரிந்தவ்வெம்மையைப் பொறு
க்கின்ற முனிவரைப் பிள்ளையார் பாதுகாக்கவே யுலகத்தைத்
தாங்கிக் காத்தாராயிற்று - இதனானே யிக்கை மாயிருண் ஞா
ல மறுவின்றி விளங்கப் பல்கதிர் விரிந்த முகத்திற் கேற்ற தொ
ழில் செய்தவாறாயிற்று - இது நிலமிசை வாழ்நரலமரதீரத்
தெறுகதிர்க்கனலி வெம்மைதாங்கிக் காலுணவாகிச் சுட
ரொடு கொட்கு மவிர்சடை முனிவரு மருள்பெற வென்ற
புறப்பாட்டானு முணர்க - மறமு முகமுங் கையு மொரு
தொழிலைச் செய்தவினேனைக்கை தொழிலின்றி மருங்கிலே
கிடந்தது. ஒருகை யங்குசங்கடாவ வொருகை நலம்பெறு
கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇயது - ஒருகை தோட்
டியைச் செலுத்தா நிற்க மற்றைக்கை செம்மைநிறம் பெ
ற்ற வாடையை யுடைத்தாகிய துடையின் மேலே கிடந்தது—
இஃதியானை யேறுவார்க்கியல் பென்று கூறினார் - தன்னை
வழிபடுவாரிடத்து வருங்கால் யானைமேல் வந்தருள் செய்த
வியல் பாகவினிக் கைகள் காதலினு வந்துவரங் கொடுத்த
முகத்திற்கேற்றவாறுணர்க இருகை யையிருவட்டமொடெ
ஃகுவலந் திரிப்ப - இரண்டு கைகள் வட்டமையுங் கருமை
யையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச்சுழற்ற—
இதனானே யசுரர்வந்து வேள்வியைக் கெடாமலவரை யோ
ட்டுதற் கிவற்றைச் சுழற்றுதலில் வேள்வியோர்க்கு முகத்திற்
கிக்கைகளேற்றவாறுணர்க. ஒருகை மார்பொடு விளங்க
வொருகை தாரொடு பொலிய - முனிவர்க்குத் தத்துவங்க
ளைக் கூறி யுரையிறந்த பொருளை யுணர்த்துங் காலத் தொரு

கைமார்போடே விளங்காநிற்க வொருகை மார்பின்மாலை
தாழ்ந்ததனோடே சேர்ந்தழகுபெற — இறைவன் மோன
முத்திரையாய்த் தானேயிருந்து காட்ட - ஊமைத்தசும்
புணீர் நிறைந்தாற்போல வாநந்தமயமானவொளி மாணாக்
கர்க்கு நிறைதலினதற்குரிய மோனமுத்திரை கூறிற்று - தன்
னையுள்ளி யானவனுயிரொடொன்றுதலுணர்க - இக்கைக
ளெஞ்சிய பொருள்களை விளக்கு முகத்திற் கேற்றவா றுண
ர்க. ஒருகை தொடியொடு மீமிசைக்கொட்பக் கீழ்வீழொ
ருகை பாடின் படுமணியிரட்ட - ஒருகை தொடியொடு
மேலேசுழன்று களவேள்விக்கு முத்திரைகொடுப்ப கீழ்
வீழ்ந்த மற்றைக் கையோசையினிதாகி யொலிக்கின்ற மணி
யை மாறியொலிக்கப் பண்ண — இக்கைகள் வேள்வி வேட்கி
ன்ற திருமுகத்துக்கேற்றவா றுணர்க. ஒருகை நீனிறவிசும்
பின் மலிதுளி பொழிய வொருகை வானரமகளிர்க்கு வது
வை சூட்ட - ஒருகை நீலநிறத்தையுடைய மேகத்தாலே மி
க்க மழையைப் பெய்வியாநிற்க. வொருகை தெய்வமகளிர்
க்கு மணமாலையைச்சூட்ட — என்றது வள்ளியொடு நகை
யமர்ந்த முகமுலகி னில்வாழ்க்கை நிகழ்த்துவித்த தாகலின
வ்வில்வாழ்க்கை நிகழ்த்துதற்கு மழையைப்பெய்த தொரு
கை யொருகையில்வாழ்க்கை நிகழ்த்தற் பொருட்டு மணமா
லை சூட்டிற் றென்றவாறு. ஆங்கப்பன்னிருகையும் பாற்ப
டவியற்றி - அப்படியே பன்னிரண்டு கையு முகத்தின் ப
குதியிலே படும்படி தொழில்செய்து முகங்களி லொருமுக
ம்மார்க்கு மொருமுக விளக்கு மொருமுகம் வேட்டன் றொ
ருமுகமமர்ந்தன றொருமுகம் விரிந்தன் றொருமுகங் கொ
டுத்தன் றிம்மூவிருமுகனுமத்தொழில் களித்துச்செய்யுமு
றைமைகளைப்பயின்று நடத்துகையினாலே யம்முகங்களுக்
குப் பொருந்தத் தோள்களி விருகை திரிப்ப வொருகை வி
ளங்க வொருகைபொலிய வொருகைகொட்ப வொருகையி
ரட்ட வொருகை பொழிய வொருகைசூட்ட வொருகையை

யர்க்கேந்திற் றொருகை யுக்கஞ் சேர்த்திற் றொருகை கடா வவொருகையசைந்தது அப்படியேயன்றிருகையுமுகத்தின் பகுதியிலே படும்படி தொழில் செய்தன - இச்சொன் முடிபிற் கேற்பக் கைகளையு முகங்களையு மாட்டாக முடிக்க - திரிப்பவென்பது முதலிய நிகழ்காலச்செய வெனெச்சங்கள்· எந்திற்று சேர்த்திற் றென்பன முற்றுவினைகொண்டு முடிந்தன· அந்தரப்பல்லியங் கறங்க - ஆகாயத்தினது துந்துமி யொலிப்ப— திண்காழ் வயிரெழுந்திசைப்ப - திண்ணிய வயிரத்தையுடைய கொம்புமிக் கொலிப்ப— வால்வளை ஞரல - வெள்ளிய சங்கு முழங்க— உரந்தலைக் கொண்ட வுருமிடி முரசமொடு - வலியைத் தன்னிடத்தே கொண்ட வுருமேற்றின இடிப்புப்போலு மோசையையுடைய முரசுடனே— பல்பொறி மஞ்ஞை வெல்கொடியகவ - பலபொறியை யுடைய மயிலவனுளையினாலே வென்றெடுத்த கொடியிலே யிருந்தொலியாநிற்க— பொறியாகுபெயர்· விசும்பாறாக - ஆகாயமே வழியாக— விரைசெலன் முன்னி - விரைந்த செலவினை மேற்கொண்டு— உலகம் புகழ்ந்த வுயர் விழுச்சீர் - நன்மை யோங்கு நன்மக்கள் புகழ்ந்த வுயருஞ் சீரினையுடைய புகழினையுடைய— அலைவாய்ச் சேறலு நிலைஇயபண்பே - நாமனூ ரலைவாயென்னுந் திருப்பதியேற வெழுந்தருளுதலுமவர்க்கு நிலைபெற்ற குணம் (குன்றமர்ந் துறைதலு முரிய னதுவன்றி வேழமேற்கொண் டியற்றி கறங்க விசைப்ப ஞரலவகவ முன்னியலைவாய்ச் சேறலு நிலைஇயபண்பென முடிக்க) அஃதா அன்று - அதுவன்றி·

திருச்சீரலைவாய் முற்றிற்று·

மூன்றாவது

திருவாவினன்குடி·

சீரைதைஇய - வுடுக்கையர்சீரொடு, வலம்புரிபுரையும் - வாளரைமுடியினர், மாசறவிமைக்கு - முருவினர்மானி, னுரிவை

தைஇய - வூன்கெடுமார்பி, னென்பெழுந்தியங்கு - மியாக்
கையர்நண்பகற், பலவுடன்கழிந்த - வுண்டியரிகலொடு, செ
ற்றநீக்கிய - மனத்தினர்யாவதுங், கற்றோரறியா - வறிவின
ர்கற்றோர்க்குத், தாம்வரம்பாகிய - தலைமையர்காமமொடு, க
டுஞ்சினங்கடிந்த - காட்சியரிடும்பை, யாவதுமறியா - விய
ல்பினர்மேவரத், துனியில்காட்சி - முனிவர்முற்புகப், புகை
முகந்தன்ன - மாசிறூவுடை, முகைவாயவிழ்ந்த - தகைசூழா
கத்துச், செவிநேர்புவைத்த - செயவுறுதிவவி, னல்லியாழ்ந
வின்ற - நயனுடைநெஞ்சின், மென்மொழிமேவல - ரின்னன
ரம்புளர, நோயின்றியன்ற - யாக்கையர்மாவி, னவிர்தளிர்பு
ரையு - மேனியரவிர்தொறும், பொன்னுரைகடுக்குந் - தித
லையரின்னகைப், பருமந்தாங்கிய - பணிந்தேந்தல்குன், மா
சின்மகளிரொடு - மறுவின்றிவிளங்கக், கடுவொடொடுங்கி
ய - தூம்புடைவாலெயிற், றழலெனவுயிர்க்கு - மஞ்சுவருகடு
ந்திறற், பாம்புபடப்புடைக்கும் - பல்வரிக்கொடுஞ்சிறை,
புள்ளணிநீள்கொடிச் - செல்வனும்வெள்ளேறு, வலவயினு
யரிய - பலர்புகழ்திணிதோ, ளுமையமர்ந்துவிளங்கு - மிமை
யாமுக்கண், மூவெயின்முருக்கிய - முரண்மிகுசெல்வனு,
நூற்றுப்பத்தடுக்கிய - நாட்டத்துநூறுபல், வேள்விமுற்றி
ய - வென்றடுகொற்றத், தீரிரண்டேந்திய - மருப்பினெழி
னடைத், தாழ்பெருந்தடக்கை - யுயர்த்தயானை, யெருத்தமே
றிய, திருக்கிளர்செல்வனு, நாற்பெருந்தெய்வத்து - நன்ன
கர்நிலைஇய, வுலகங்காக்கு - மொன்றுபுரிகொள்கைப், பலர்
புகழ்மூவருந் - தலைவராக, வேமுறுஞாலந் - தன்னுட்டோன்
றித், தாமரைபயந்த - தாவிலூழி, நான்முகவொருவற் - சுட்
டிக்காண்வரப், பகலிற்றோன்று - மிகலில்காட்சி, நால்வே
றியற்கைப் - பதினொருமூவரொ, டொன்பதிற்றிரட்டி - யு
யர்நிலைபெறீஇயர், மீன்பூத்தன்ன - தோன்றலர்மீன்சேர்பு,
வளிகிளர்ந்தன்ன - செலவினர்வளியிடைத், தீயெழுந்தன்ன -
திறலினர்தீப்பட, வுருமிடித்தன்ன - குரலினர்விழுமிய, வுறு

குறைமருங்கிற் - றம்பெறுமுறைகொண்மா, ரந்தரக்கொட்
பினர் வந்துடன்காணத், தாவில்கொள்கை - மடந்தையொ
டுசின்னா, ளாவினன்குடி - யசைதலுமுரியனதாஅன்று·

இதனது பொருள்

(சீரைதைஇய முதன்முநிவர் முற்புக வென்னுந் துணையு
மொருதொடர் சீரைதைஇய வுடுக்கையர் - மரவுரியையுடை
யாகச்செய்தவுடையினையுடையார் — இதற்குச்சற்றோட்த்தன்
முகவிபனசெய்தவுடுக்கையென்பாருமுளர் சீரொடுவலம்பு
ரிபுரையும்வானரைமுடியினர் · அழற்காடுவடிவாயுநிறத்தா
லும் வலம்புரிச்சங்கினையொக்கும் வெள்ளியநரைமுடியினை
யுடையார் — மாசறவிமைக்குமுருவினர் · எக்காலத்துநீராடு
தலினழுக்கறவிளங்கும வடிவினையுடையார் — மானினுரிவை
தைஇய ஊனகெடுமார்பி னென்பெழுந்தியங்கும் யாக்கை
யர் - கிருட்டிருசதம் போர்த்த ரதங்களால் விட்டபட்டி
ணிபாற் றசைகெடுகின்ற மார்பினை லும்புகள் கோவைதோ
ன்றி யுலவு முடம்பினையுடையார்· தைஇயமார்பெனக· நன்
பகற் பலவுடன் கழிந்த வுண்டியர் - எப்பொருளு நுகர்தற்
கு நன்றாகிய பகற்பொழுதுகள் பலவுஞ் சேரக்கழிந்த வுண
வினையுடையார் இதுமாத வுபவாசிகளைக் கூறிற்று· இகலொ
டு செற்றநீக்கிய மனத்தினர் - மாறுபாட்டோடே நெடுங்கா
லநிற்குஞ் செற்றத்தினையு நீக்கிய மனத்தினை யுடையார்— ப
கைமை நெடுங்கால நிகழ்வது செற்றம் கற்றோர் யாவதுமறி
யா வறிவினர் - பலவற்றையுங் கற்றோர் சிறிதுமறியப் ப
டாத வியல்பான வறிவினை யுடையார்— கற்றோர்க்குத் தாம்
வரம்பாகிய தலைமையர் - பலவற்றையுங் கற்றோர்க்குத் தா
மெல்லையாகிய தலைமையையுடையார்— என்றது கல்வியைக் க
ரைகண்டாரென்றவாறு காமமொடுகடுஞ்சினங்கடிந்தகாட்
சியர் - ஆசையோடே கடிய சினத்தையும் போக்கின வறிவி
னை யுடையார் (கோபத்தின் பின்னர் சிறிது பொழுது நிற்

பது சிறம்) இடும்பையாவது மறியாவியல் பினர் - தவத்தான் மெய்வருத்த முளதேனு மநத்தான் வருத்தஞ் சிறிது மறியப்படாத வியல்பினை யுடையார் — மேவர - திருவுள்ளம் பொருந்துதல்வர — துனியில் காட்சி முநிவர் முற்புக - ஒருவருடனும் வெறுப்பில்லாத நல்லறிவினை யுடையமுநிவர் முன்னேசெல்ல — உடுக்கையர் முடியின ருருவினர் யாக்கையருண்டியர் மநத்தின ரறிவினர் தலைமையர் காட்சிய ரியல்பினராகிய முநிவர் மேவர முற்புக வெனமுடிக்க· புகைமுகந்தன்ன முதல் மேவலொன்றுந் துணையும் பாடுவாரைக் கூறிற்று· புகைமுகந்தன்ன மாசிறூவுடை - புகையைமுகந்தாலொத்த தெய்வத்தன்மை யாலழுக்கேறாத தூயவுடையினையும் — முகைவாயவிழ்ந்த தகைசூழாகத்து - முகைவாய் நெகிழ்ந்த மாலைசூழ்ந்த மார்பினையும் — கட்டுதவிற் றகையென்றார் மாலை யாகுபெயர் செவிநேர்பு வைத்த செயவுறு திவவினல் யாழ்நவின்ற - ஏஃகுச்செவியாலே சுருதியை யளந்து நரம்பைக்கட்டினசுற்றுதலுறும்வார்க்கட்டினையுடையநன்றாகிய யாழினிசையிலேபயின்ற — நயனுடை நெஞ்சின்மென்மொழி மேவல ரின்னரம்புளர - இரமுடைய நெஞ்சாலே யெக்காலமுமெல்லிய வார்த்தைசொல்லுதலைப் பொருந்திய கந்திருவரினியநரம்பைவாசிக்க — நவின்றநயனென்க· நோயின்றுமுதன் மகளிரொன்றுந் துணையும் பாடுமகளிரைக் கூறிற்று· நோயின் றியன்ற யாக்கையர் - மக்களுக்குரிய நோயில்லையாக நிருமித்த வுடம்பினையுடையராய் — மாவினவிர்தளிர் புரையு மேனியர் - மாவினது விளங்குகின்ற தளிரை யொக்குநிறத்தினையுடையராய் — அவிர்தொறும் பொன்னுரை கடுக்குந்திதலையர் - விளங்குந்தோறும் பொன்னுரைவிளங்கினாற் போலுந் தித்தியினையுடையராய் — இன்னகைப்பருமந் தாங்கிய பணிந்தேந் தல்குன் மாசின் மகளிரொடு - கட்கினிய வொளியினையுடைய பதினறு கோவையாகிய மேகலையணிந்த தாழ்வேண்டிய விடந்தாழ்ந்துயா

வேண்டியவிடமுயர்ந்த வக்குவிளையுடைய குற்றமில்லாதக
ர்திருவர்மகளிரோடே — மறுவின்றிவிளங்க - குற்றமின்றாய்
விளங்காநிற்க — உடையிளையு மாகத்திளையு முடையமென்
மொழிமேவலர் யாக்கை முதலியவற்றை யுடையராய் மா
சிலாத மகளிரோடேமறுவின்றி விளங்க வின்னரம்புளரவெ
ணமுடிக்க கடுவொடொடுங்கிய தூம்புடை வாலெயிற்று -
நஞ்சுடனே யுறைக்குள்ளே கிடந்த துளையினை யுடைய வெள்
ளிய வெயிற்றினையும் மிடற்றிலஞ்சு நன்னிடத்தே தோன்
றுதலினஞ் சோடென்றார் எயிறு - காளி - கராளி - காளாத்
திரி - யமதூதியென நான்காம் அழலென வுயிர்க்குமஞ்சுவரு
கடுந்திறல் - நெருப்பென்னும்படி நெட்டுயிர்ப்புக் கொள்ளு
ங் கண்டார்க்கச்சந்தோன்றுங் கடியவலியினையுமுடைய —
பாம்புபடப்புடைக்கும் - பாம்புபடும்படியடிக்கும் — பல்
வரிக்கொடுஞ் சிறைப்புள்ளணி நீள்கொடிச் செல்வனும் -
பலவரியினை யுடைத்தாகிய வளைந்த சிறகினை யுடைய கருட
னை யணிந்த நீண்ட கொடியினை யுடைய திருமாலும் — வலவ
யின் வெள்ளேறுயரியசெல்வன் - வெற்றிக்களத்தே வெள்ளி
ய வேற்றினைக் கொடியாக வெடுத்தவுருத்திரன் — உமையம
ர்ந்து விளங்குஞ் செல்வன் - இறைவி யொருபாகத்தே பொ
ருந்தி விளங்குஞ் செல்வன் — பலர் புகழ் திணிதோள் - பலரு
ம் புகழ்கின்ற சிக்கென்ற தோளினையும் — இமையா முக்க
ண் - இதழ் குவியாத மூன்றுகண்ணினையுமுடைய செல்வன் —
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும் - முப்புரத்தை
யெரித்த மாறுபாடுமிக்க செல்வனும் — நூற்றுப்பத் தடுக்கி
ய நாட்டத்து - நூற்றைப்பத்தாக வடுக்கிய கண்ணினையும்
என்றதாயிரங்கண் ணென்றவாறு. நூறுபல் வேள்வி முற்
றிய வென்றடு கொற்றத்து - நூறென்னு மெண்ணாகிய பல
வேள்விகளை வேட்டு முடித்ததனாற் பெற்றடகைவனா வென்
றுகொல்கின்றவெற்றியினையும் — ஏந்தியவீரிரண்டுமருப்பின்
தலையேந்தியிருக்கின்ற நான்காகிய கொம்பினையும் — எழின

டை • அழகினையுடையநடையினையும்—தாழ்பெருந்தடக்கைக்
நிலத்தேகிடக்கின்ற பெரியவளவினையுடையகையினையுமுடை
ய— உயர்த்தயானையெருத்தமேறியதிருக்கிளர்செல்வனும்-எ
ல்லாருமுயர்த்துச் சொல்லப்படுகின்ற யானையின் கழுத்தின்மே
லேறியதிருமகள் விளங்குதற்குக் காரணமானவிந்திரனும் —
உயர்ந்த வுயர்த்த வென்விகாரமுமாம். நாட்டத் தினையுங்
கொற்றத்தினைய முடைய செல்வனென்க. மருப்பு முதலி
ய வற்றையுடைய யானை யென்க · நாற்பெருந் தெய்வத்து ந
ன்னகர்நிலைஇயவுலகங்காக்குமொன்று புரிகொள்கை • நா
ன்காகியபெரியதெய்வத்தையுடைய நன்றாகியவூர்களினிலைபெ
ற்றவுலகத்தைக்காக்குமொருதொழிலையேவிரும்பபகோட்பா
ட்டையுடைய செல்வனைமுன்னை கூட்டித் திருமாலுக்க
டையாக்குக. நாற்பெருந்தெய்வமாவன இந்திரன், யமன், வ
ருணன், சோமனென்னுந்தெய்வங்கள் பலர்புகழ்மூவருந்த
லைவராக - பலரும்புகழ்கின்றவயனரியரனென்னுமூவருந் தத்
தமக்குரியதொழில்களை முன்புபோலநிகழ்த்தித்தலைவராகவே
ண்டி—என்றது பிள்ளையாரயனைச்சபித்தலி னவன் படைத்த
ற்றொழிலைத்தவிரவே யேனையிருவர்க்குங் காத்தற் றொழிலு
மழித்தற் றொழிலுமின்றாமாகலின் மூவருந் தத்தமக்குரிய
தொழில்களைப் பெற்றுத்தலைவராக வென்றார். ஞாலந்தன்னி
ற் றோன்றி யேழுறநான்முக வொருவற்சுட்டி - பிள்ளையா
ர் சபித்தலாலே மண்ணிடத்தே தோன்றி மயக்கமுறுகின்ற
நான்குமுகத்தையுடையவயனைப்பழையபதியிலே நிறுத்தக்க
ருதி — தாமரைபயந்தவூழித் தாவினான்முகவொருவன் - திரு
மாலுடைய திருவுந்தித்தாமரைபெற்ற ஊழிகடோறுந் தன்
படைத்தற்றொழிலில்வருத்தமில்லாத வொருவன்— இனித்தா
மரைபென்னு மென்னைத்தந்த தாவில்லாத ஊழிகாலத்தை யு
டையவயனுமாம் - பயந்தவொருவ னென்க - சாபமென்ற
து - பிள்ளையாரசுரரையழித்துத் தேவரைக்காத்தற் கிந்திரன்
மகடெய்வயானையாரை யவர்க்குக்கொடுத்தவிடத்தே பிள்ளை

யார் தங்கையில்வேலைநோக்கி நமக்கெல்லாந்தர்த திவ்வேலெ
ன்ன வருகிருந்த வயனிவ்வேலிற் கிற்நிலையென்றால் வர்ததன்
றேவென்றுணைக நங்கையில் வேலுக்குநீகொடுப்ப தொரு
சத்தியுண்டோவென்று கோபித்திங்ஙனங் கூறிய நீ மண்ணி
டைச்செல்வாயென்ற சாபத்தை சாண்வர - அழகு தோன்
ற — பகவிற்றேன்று மிகவில்காட்சி - ஒருபொருள் பலவா
மாறுபகுத்துக்காண்டற் கண்வேறுபடத்தோன்றுந் தம்மு
ண்மாறுபாடில்லாத வறிவினையுடைய — நால்வேறியற்கைப்
பதினொருமூவரொடு - நான்சாயவேறுபாட்டியல்பினையுடை
ய முப்பத்துமூவரும் — என்றது - ஆதித்தன் - உருத்திரன் -
வசு - மருத்துவன் - என்னுமோரோர் பொருள்கள் பலவாக
ட்பகுக்குங்கால் - பன்னிருவர் - பதினொருவர் எண்மர் - இ
ருவராகப்பகுக்க - நான்குகூறுயமுப்பத்துமூவராயினரொ
ன்றவாறு - பதினொருவராகியமூவரொன்க - அவர்ஆதித்தர்பன்
னிருவரும் - உருத்திரர் பதினொருவரும் - வசுக்களெண்ம
ரும் மருத்துவரிருவருமாம் - ஒரு - எண்ணொடு - ஒன்பதிற்
றிரட்டி யுயர்நிலை பெறீஇயர் - பதினெண் வகையாகிய
வுயர்ந்த நிலைபெற்றவரும் — என்றது பதினெண் கணங்
களை - பெறீஇயர் - தொழிற்பெயர் - அவர்தேவரும் - அசு
ரரும் - தயித்தியரும் - கருடரும் - கின்னரரும் - கிம்புரு
டரும் - இயக்கரும் - விஞ்சையரும் - இராக்கதரும் - கந்தி
ருவரும் - சித்தரும் - சாரணரும் - விச்சாதரரும - பூதவேதா
ளமும் - தாராகணமும் - நாகரும் - ஆகாயவாசிகளும் - போ
கபூமியோரும் எனவிவரிவர்க்குப் பிறவாறுமுறைப்பர். மீ
ன்பூத்தன்ன தோன்றலர் - உடுக்கள்பொலிவுபெற்றுத் தோ
ன்றினாலொத்த தோற்றத்தையுடையராய் — மீன்சேர்பு வளிகி
ளர்ந்தன்ன செலவினர் - மீன்களுலாவுகின்றவிடத்தே சேர்ந்
து காற்றெழுந்தாலொத்த செலவினையுடையராய் — வளியி
டைத்தீயெழுந்தன்ன திறவினர் - காற்றிடத்தே நெருப்பெ
ழுந்தாலொத்த வலியினையுடையராய் — தீப்படவுருமிடித்தன்

ண குரலினர் - நெருப்புப்பிறக்க வருமேறிடித்தாற்போன்ற
குரலினையுடையராய் — இவை வினையெச்சமுற்று. தம்விழு
மிய பெறுமுறைகுறையுறு மருங்கிற்கொண்மார் - தம்மு
டைய ஓரிகாசிய படைத்தல் காத்தலழித்தலென்னுந்தொழில்
களைப் பண்டுபோலப்பெறுகின்றமுறைமையினைக்குறைவே
ண்டிநின்று பெறுங்கூற்றாலே முடித்துக்கொடற்கு. அந்
தரக்கொட்பினர் - ஆகாயத்தே சுழற்சியினையுடையராய் — உ
டன் வந்துகாண - சேரவந்துகாணும்படியாக — தாவில்கொ
ள்கை மடந்தையொடு - வருத்தமில்லாத வருட்சுற்டையுடைய
தெய்வயானையாருடன் — ஆவினன் குடி சின்னாளசைதலுமு
ரியன் - ஆவினன்குடியென்னுமூரிலே சிலநாளிருத்தலுமு
ரியன் — டலர்புகழ்மேவருந்தலைவராகவேண்டியதற்குக் குறை
பாடுண்டாக்கின நான்முகனொருவனைக் கருதியொன்றுபுரி
கொள்கைப்புள்ளணிநீள் கொடிச்செல்வனு முரண்மிகுசெ
ல்வனும் - யானையெருத்தமேறியசெல்வனும் - முப்பத்துமூவரு
ம் - பதினெண்கணங்களுந் - தோன்றலர் - செலவினர் - திறவின
ர் - குரலினர் - கொட்பினராயுடனேவந்து தம்விழுமியபேறு
முறைகுறையுறுமருங்கின் முடித்துக்கோடற்கு மென்மொழி
மேவலரின்னரம்புளரமுநிவர் - மேவர - முற்புகக் - காண்வர -
வாவினன்குடியிலேயசைதலுமுரியனென முடிக்க - கந்திருவ -
ர் - பாட்டான் முனிவுதீர்ப்பார் - முநிவர் தம்மைமறுமைபற்றி
முன்னேசென்றார். இனிச்சித்தன்வாழ்வென்று சொல்லுகி
ன்றனர் - முற்காலத்தாவினன்குடியென்றுபெயர்பெற்றதெ
ன்றுமாம் - அது - வெண்பா - நல்லம்பரநல்லகுடி யுடைத்து
ச்சித்தன்வாழ் - வில்லந்தொறுமூன்றெரியுடைத்து - நல்லாவ
ப் - பாட்டுடைத்துச் சோமன்வழிவந்தபாண்டியநின் - னாட்
டுடைத்துநல்லதமிழ் - என - ஔவையார் கூறியதனாலுணர்
க - சித்தனென்பது - பிள்ளையாருக்குத்திருநாமம் - அஃதா அ
ன்று அதுவன்றி.

திருவாவினன்குடி முற்றிற்று.

திருவேரகம்.

இருமூன்றெய்திய - வியல்பினின்வழாஅ, திருவர்ச்சுட்டி
ய - பல்வேறுதொல்குடி, யறுநான்கிரட்டி - யிளமைநல்லியா
ண், டாறினிற்கழிப்பிய - வறனவில் கொள்கை, மூன்றுவ
கைக்குறித்த - முத்தீச்செல்வத், திருபிறப்பாளர் - பொழுத
றிந்துநுவல, வொன்பதுகொண்ட - மூன்றுபுரி நுண்ஞா
ண், புலராக்காழகம் - புலரவுடீஇ, யுச்சிக்கூப்பிய - கையி
னர்தற்புகழ்ந், தாறெழுத்தடக்கிய - வருமறைக்கேள்வி, நா
வியன்மருங்கி - னவிலப்பாடி, விரையுறுநறுமல - ரேந்திப்
பெரிதுவந், தேரகத்துறைதலுமுரியனதாஅன்று.

இதன் பொருள்.

இருமூன்றெய்தியவியல்பினின்வழாஅது - ஓதல் ஓதுவித்தல் -
வேட்டல் - வேட்பித்தல் - ஈதல் ஏற்றல் - என்னுமாறாகிய த
ன்மை பொருந்திய விலக்கணத்தின் வழுவாமல்— வழாமல்.
வழுவாமலெனத்திரிக்க. இருவர்ச்சுட்டிய பல்வேறு தொல்
குடி - தாயுந்தந்தையுமாகிய விருவர்குலத்தையு முலகத்தார் ந
ன்றென்று மதித்த பலவாய வேறுபட்ட பழைய குடியிற்பி
றந்த விருபிறப்பாளர்— குடி - குண்டலர் - காசிபர் என்றாற்
போல்வன. அறுநான்கிரட்டி யிளமைநல் லியாண் டாறினி
ற் கழிப்பிய - அறுநான்கிரட்டி யாண்டுநல்லிளமையை யா
றினிற்கழிப்பியவெனமாறுக - இருபத்துநான்கிரட்டியாகிய
நாற்பத்தெட்டாண்டு நல்லிளமையை வேதங்கூறியநெறியி
லேபோக்கியவிருபிறப்பாளர்—பிரமசரியங்காத்தவந்தணர்.
அறனவில்கொள்கை - அறத்தையெப்பொழுதுங் கூறுகின்ற
கோட்பாட்டினையும்— மூன்றுவகைக் குறித்த முத்தீச்செ
ல்வத்து - நாற்சதுரமும் - முச்சதுரமும் . வில்வளைவுமாகிய
மூன்றுவகைகளைக்கருதின - ஆகவனீயம் - தெக்கணாக்கினியம்.

காருகபத்தியம் - என்னுமூன்றுதீயாலுண்டாகிய செல்வத்
தினையுமுடைய இருபிறப்பாளர் — உபநயனத்துக்கு முன்
பொருபிறப்பும் பின்பொருபிறப்புமாகிய விருபிறப்பினையு
முடையவந்தணர் — பொழுதறிந்து நுவல - தாங்கள் வழிபடு
ங்காலமறிந்து கோத்திரங்களைக்கூற — ஒன்பதுகொண்ட
மூன்றுபுரி நுண்ஞாண் - மும்நூற்கொண்டு முப்புரியாக்கு
தலி னொன்பதாகிய நூலைத்தன்னிடத்தேகொண்ட வொருபு
ரிமூன்றாகிய நுண்ணியபூணுநூல் ஞாணினையுங் கொள்
கையினையுஞ் செல்வத்தினையுமுடைய விருபிறப்பாளரெங்க
புலராக்காழகம் புலரவுடீஇ - நீராடுங்காற் றோய்க்கப்பட்
ட கலிங்கமுடம்பிலேகிடந்து புலரவுடுத்து — என்றதீரத்து
டனேயிருந்துவழிபடுதல் கூறிற்று. உச்சிக்கூப்பிய கையி
னர் தற்புகழ்ந்து - தலைமேலேவைத்த கையினையுடையராய்ப்
பிள்ளையாரைத்துதித்து — ஆறெழுத்தடக்கிய வருமறைக்கே
ள்வி - ஆறெழுத்தைத் தன்னிடத்தேயடக்கியிருக்கின்ற கேட்
டற்கரிய மறையை யுச்சரிக்கப்படுமந்திரத்தை — அது - ந
மோ குமாராயவென்பதாம். நாவியன்மருங்கி னவிலப்பா
டி - நாப்புடைபெயருமளவிலேயில வுச்சரித்து — விரை
யுறுநறுமலரேந்தி - மணமிகநாறிய பூவையெடுத்து — பெரி
துவந்தேரகத் துறைதலு மரியன் - பெரிதுமகிழ்ந்தேரகமெ
ன்கிறவூரிலேயிருத்தலுமுரியன். இருபிறப்பாளர்புலரவுடீஇ
தற்புகழ்ந்து - நறுமலரேந்தி - கூப்பியகையராய் - நவிலப்
பாடி - பொழுதறிந்து நுவல்வதற்குப்பெரிது மகிழ்ந்தேர
கத்துறைதலு முரியனெனமுடிக்க. ஏரகம் - மலைநாட்டகத்
தொருதிருப்பதி - அஃதான்று - அதுவன்றி.

திருவேரகம் - முற்றிற்று.

குன்றுதோறாடல்,

பைங்கொடி நறைக்கா - யிடையிடுபுவேல, னம்பொதிப்பு
ட்டில் - விரைஇக்குளவியொடு, வெண்கூதாளந் - தொடுத்த
கண்ணிய, னறுஞ்சாந் தணிந்த - கேழ்கிளர்மார்பிற் - கொடு
ந்தொழில்வல்விற் - கொலைஇய கானவர், நீடமைவிளைந்த - தே
க்கட்டேறற், குன்றகச்சிறுகுடிக் - கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறுபறைக் - குரவை யயர, விரலுளர்ப்பவிழ்
ந்த - வேறுபடுநறுங்காற், குண்டுசுனைபூத்த - வண்டுபடுகண்
ணி, யிணைத்தகோதை - யணைத்த கூந்தன், முடித்தகுல்லை - யி
லையுடைநறும்பூச், செங்கான் மராஅத்த - வாலிண ரிடையிடு
பு - சுரும்புணத்தொடுத்த - பெருந்தண் மாத்தழை, திருந்து
காழல்கு - றிளைப்பவுடீஇ, மயில்கண்டன்ன - மடநடை ம
களிரொடு, செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச், செ
யலைத்தண்டளிர் - துயல்வருங்காதினன், கச்சினன் கழலினன்
செச்சைக் கண்ணியன், குழலன் கோட்டன் - குறும்பல்லியத்
தன், றகரன் மஞ்ஞையன், புகரில்சேவலங், கொடியனெடி
யன் - றொடியணிதோள, னரம்பார்த்தன்ன - வின்குரற்றொ
குதியொடு, குறும்பொறிக்கொண்ட - நறுந்தண்சாயன், ம
ருங்கிற்கட்டிய - நிலனேர்புதுகிலினன், முழவுறழ்தடக்கையி
னியலவேந்தி, மென்றோட்பல்பிணை - தழீஇத்தலைதந்து, கு
ன்றுதோறாடலு - நின்றதன் பண்பேயதாஅன்று.

இதன் பொருள்.

பைங்கொடி - பச்சிலைக்கொடி — எல்லாவற்றினும்பசுத்தி
ருத்தலிற் பச்சிலையென்று பெயர்பெற்றது - பச்சிலையென்
றது சினைவினைமுதன்மேலேற்றிப் பைங்கொடியென்றார்.
நறைக்காய் - நறுநாற்றத்தையுடையகாய் — அது சாதிக்கா
ய். இடையிடுபு - நடுவேவிட்டு — வேலன் - படிமத்தான் —

அம்பொதிப்புட்டில் - அழகினையுடைத்தாகிய பொதிதலையுடைய தக்கோலமென்னுமுசுவின்காய்— அது - புட்டில்போறலிற் புட்டிலென்றார். விரைஇ - கலந்து— குளவியொடு - காட்டுமல்லிகையுடனே— வெண்கூதாளந்தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையுங்கட்டியகண்ணியையுடையனாய்— நறுஞ்சாந்தணிந்த கேழ்கிளர்மார்பில் - நறியசந்தனத்தைப் பூசிப்புலர்ந்த நிறம்விளங்குமார்பினையுடைய— வேலன்பைங்கொடியாலே புட்டில்விரைஇ நறைக்காயிடையிடுபு குளவியொடுகூதாளத்தையுங்கட்டியகண்ணியையுடையனாய் - கண்ணியன் - வினையெச்சவினைக்குறிப்புமுற்று. கொடுந்தொழில்வல்விற் கொலைஇயகானவர் - கொடியதொழிலையுடைய வலியவில்லாற் கொல்லுதலைச்செய்தகுறவர்— குலைஇயவென்றபாடத்திற்கு - வில்லைவளைத்த கானவரென்க - என்னவே - கோறல் பெற்றாம். நீடமைவிளைந்த தேக்கட்டேறல் - நெடுகின மூங்கிலிலேயிருந்துமுற்றின தேனாற்செய்த கட்டெளிவை குன்றகச்சிறுகுடிக் கிளையுடன்மகிழ்ந்து - மலையிடத்துச் சிறியவூரிலேயிருக்கின்றசுற்றத்தோடேயுண்டு மகிழ்ந்து— தொண்டகச்சிறுபறைக்குரவையயர - அந்நிலத்துக்குரிய தொண்டகமாகிய சிறியபறையினது தாளத்திற்குக் குரவையாட கானவர்தேறலைமகிழ்ந்து குரவையாடவென்க விரலுளர்ப்பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்கண்ணி - விரல்தலைப்பாலே வலிய வலர்த்த வலர்ந்த பூவாகவின்வேறுபடுகின்ற நறியமணத்தினையுடைய தலையிற் சூடுமாலையினையும்— குண்டுசுனை பூத்தவண்டுபடுகண்ணி - அதுதாழ்ந்த சுனையிற்பூத்தபூவாற்செய்த வண்டுவீழ்கின்ற கண்ணி— இதுவொற்றுமை நயம்பற்றிச் செயப்படுபொருள் மேனின்றது. கார்க்குண்டு சுனைபாடமாயிற் - கரியசுனையென்க. இணைத்தகோதை - இதழ்பறித்துக்கட்டினமாலையினையும்— அணைத்தகூந்தல் - சேர்த்தினகூந்தலினையுமுடைய— முடித்தகுல்லை - இலையைத்தலையிலேயணிந்த கஞ்சங்குல்லையினையும்— இலையுடைநறும்பூ - இலை

யையுடைத்தாகிய நறியபூங்கொத்துக்களையும்— செங்கான்
மராஅத்தவாலிணரிடையிடுபு சுரும்புணத்தொடுத்த பெருந்
தண்மாத்தழை - செவ்விய காலினையுடைய மராத்திடத்தன
வாகிய வெள்ளிய கொத்துக்களை நடுவேவைத்துச்சுரும்புதே
னை யுண்ணும்படி தொடுத்த பெரிய குளிர்ந்த வழகினை
யுடைய தழை— குல்லையும் பூவையும் வாலிணரிடையிட்டு
த் தொடுத்த தழையென்க. திருந்துகாழல்குறிளைப்பவுடீஇ -
வடங்கதிருந்து மல்குலிடத்தே யசையும்படியுடுத்து— அல்
குற்றிளைப்பவென்னும் வல்லொற்றுவிகாரமாய்நின்றது. ம
யில கண்டன்னமகளிரொடு - சாயலுடைமையான்மயிலைக்க
ண்டாற்போன்ற மகளிரொடு— மடநடைமகளிர் - மடப்பம்
பொருந்திய வொழுக்கத்தினையுடைய மகளிர்— தழையை யு
டுத்து மயில்கண்டன்ன மகளிரென்க. உடீஇயென்னும் வினை
யெச்சமன்ன வென்னும் பெயரொச்சமாகிய வுவமவுருபோ
டு முடிந்தது - கண்ணியினையுங் கோதையினையுஞ்சேர்த்தின
கூந்தலினையு மடநடையினையுமுடைய மகளிரென்க - மகளி
ர் தன்னைச் சேவிக்குமகளிர் - செய்யன் - சிவந்தவன் — சி
வந்தவாடையன் செவ்வரைச் செயலைத்தண்டளிர் துயல்வரு
ங்காதினன் - சிவந்தவாடையினை யுடுத்துச் சிவந்தவரையினை
யுடையவசோகிற்குளிர்ந்த தளிரசையுங் காதுபொருந்திய—
கச்சினன் கழலினன் செச்சைக்கண்ணியன் - கச்சைக் கட்
டிக்கழலையணிந்து வெட்சிமாலையைச்சூடி— குழலன் கோ
ட்டன் குறும்பல்லியத்தன் - குழலினையூதிக் கொம்பைக் கு
றித்துச் சிறுபல்லியங்களை யெழுப்பி— தகரன் மஞ்ஞை
யன் புகரில்சேவலங்கொடியன் - கடாவைப் பின்னிட்டு
மயிலையேறிக் குற்றமில்லாத கோழிக்கொடியை யுயர்த்து—
நெடியன் - தான்வேண்டியவடிவு கோடலிற் பிள்ளையாராயி
ராது நெடுகவளர்ந்து— தொடியணிதோளன் - தோளிலே
தொடியையணிந்து— நரம்பார்த்தன்ன வின்குரற்றொகுதி
யொடு - நரம்பாரவாரித்தா லொத்த வினியமிடற்றையுடைய

பாடுமகளிரோடே— இவர்கடன்னைச் சேவித்துப்பாடுமக ளிர். மருங்கிற்கட்டிய குறும்பொறிக்கொண்ட - இடையி லேயிறுகக்கட்டிய வுதரபந்தத்தின்மேலே யுடுப்பதாக வுட் கொண்ட— நிலனேர்பு நறுந்தண் சாயற்றுகிலினன் - நால விட்டமையாநிலத்தைப் பொருந்திய நறிய குளிர்ந்தமென் மையையுடைத்தாகிய துகிலினையுடுத்து— மென்றோட்பல்பி ணையியல - மெல்லிய தோளினையுடைய பலவாகிய மான்பிணை போலுமகளிர் குரவையாடியசைய— இவர்கள் மெய்தீண் டிவிளையாடுதற் குரியமகளிர். முழவுறழ்தடக்கையிற் றழீஇ யேந்தித் தலைதந்து - தன்னுடைய முழவை யொத்த பெரு மையையுடைய கையினாலேயவர்கள் கையினைத்தழீஇயெடுத் துக்கொண்டு முதற்கைகொடுத்து— குன்றுதோறாடலு நி ன்றதன்பண்பு - மலைகடோறுஞ் சென்றுவிளையாடுதலுந் தனக்கு நிலைநின்றகுணம்— கண்ணிய னெடியனென்பன முதலியன - வினையெச்ச வினைக்குறிப்பு முற்று - முன்னத் தினுணருங்கிளவியுளவே யென்னுஞ் சூத்திரவிதியாற் - செய்தெனெச்சப்பொருளை யுணர்த்திற்று - கானவர் குரவை யயரவதனைக்கண்டு மென்றோட் பல்பிணை குரவையாடிய சைவதனைப் பொருந்த செய்பவன் வேலன் றொடுத்த கண் ணியைச்சூடி யுடுத்துப் பொருந்திக்கட்டியணிந்து சூடியூ திக்குறித்தெழுப்பிப் பின்னிட்டேறியுயர்த்து வளர்ந்து தொ டியை யணிந்து துகிலையுடுத்துத் தொகுதியுடனே மகளிரோ டே மலைகடோறுஞ் சென்றுதழீஇ யேந்தித்தலைத்தந்தாடலு நின்றதன்பண்பெனவினைமுடிக்க - குரவையென்பது கூ றுங்காலைச் செய்தோர்செய்த காமமும்வெற்றியு மெய்தக் கூறுமியல்பிற்றாகும் - எழுவருமெழுவர் மேலுமெல்லாம் வ ழுவுமென்ப வசைப்பர்குரவைக் குரியபெயரொன்றுங் கோ தினர் கொளலே - எனவரும் - அஃதா அன்று - அதுவன்றி.

குன்றுதோறாடல் - முற்றிற்று.

பழமுதிர்சோலை.

சிறுதினை மலரொடு விரைஇமறி யறுத்து, வாரணக்கொ
டியொடு - வயிற்பட நிறீஇ, யூரூர்கொண்ட - சீர்கெழுவிழவி
னு, மார்வலரேத்த - மேவருநிலையினும், வேலன்றைஇய - வெ
றியயர்களனும், காடுங்காவுங் - கவின்பெறுதுருத்தியும், யா
றுங்குளனும் - வேறுபல்வைப்புஞ், சதுக்கமுஞ்சந்தியும் - பு
துப்பூங்கடம்பு, மன்றமும்பொதியினுங் - கந்துடைநிலையி
னு, மாண்டலைக்கொடியொடு - மண்ணியமைவர, நெய்
யோடைய - வியப்பியையதுரைத்துக், குடந்தம்பட்டுக் - கொ
ழுமலர்சிதறி, முரண்கொளுருவி - னிரண்டுடனுடீஇச், செ
ந்நூல்யாத்து - வெண்பொரிசிதறி, மதவலி நிலைஇய - மாத்
தாட்கொழுவிடைக், குருதியொடுவிரைஇய - தூவெள்ளரிசி,
சில்பலிச்செய்து - பல்பிரப்பிரீஇச், சிறுபசுமஞ்சளொடு -
நறுவிரைதெளித்துப், பெருந்தண்கணவீர - நறுந்தண்மாலை,
துணையறவறுத்துத் - தூங்கநாற்றி, நளிமலைச்சிலம்பி - னன்
னகர்வாழ்த்தி, நறும்புகையெடுத்துக் - குறிஞ்சிபாடி, யிமிழி
சையருவியொ - டின்னியங்கறங்க, வுருவப்பல்பூத் - தூஉ
ய்வெருவரக், குருதிச்செந்தினை - பரப்பிக்குறமகண், முருகி
யநிறுத்து - முரணினருட்க, முருகாற்றுப்படுத்த - வுருகெ
ழுவியனக, ராடுகளஞ்சிலம்பப் - பாடிப்பலவுடன், கோடு
வாய்வைத்துக் - கொடுமணியியக்கி, யோடாப்பூட்கைப் - பி
ணிமுகம்வாழ்த்தி, வேண்டுநர்வேண்டியாங் - கெய்தினர்வழி
பட, வாண்டாண்டுறைதலு - மறிந்தவாறே, யாண்டாண்டா
யினு - மாகக்காண்டக, முந்துநீகண்டுழி - முகனமர்ந்தேத்
திக், கைதொழூஉப்பரவிக் - காலுறவணங்கி, நெடும்பெரு
ஞ்சிமயத்து - நீலப்பைஞ்சுனை, யைவருளொருவ - னங்கை
யேற்ப, வறுவர்பயந்த - வாறமர்செல்வ, வால்கெழுகடவுட் -
புதல்வமால்வரை, மலைமகண்மகனே - மாற்றோர்கூற்றே,
வெற்றிவெல்போர்க் - கொற்றவைசிறுவ, விழையணிசிறப்பி

ற் - பழையோள்குழவி, வானோர்வணங்குவிற் - றானைத்தலை
வ, மாலைமார்ப - நூலறிபுலவ, செருவிலொருவ - பொருவி
றன்மள்ள, வந்தணர்வெறுக்கை - யறிந்தோர்சொன்மலை, ம
ங்கையர்கணவ - மைந்தரேறே, வேல்கெழுதடக்கைச் - சால்
பெருஞ்செல்வ, குன்றங்கொன்ற - குன்றாக்கொற்றத்து, வி
ண்பொருநெடுவரைக் - குறிஞ்சிக்கிழவ, பலர்புகழ்நன்மொ
ழிப் - புலவரேறே, யரும்பெறன்மரபிற் - பெரும்பெயர்மு
ருக, நசையுநர்க்கார்த்து - மிசைபேராள, வலந்தோர்க்களி
க்கும் - பொலம்பூட்சேஎய், மண்டமர்கடந்தநின் - வென்
றாடகலத்துப், பரிசிலர்த்தாங்கு - முருகெழுநெடுவேஎள், பெ
ரியோரேத்தும் - பெரும்பெயரியவுள், சூர்மருங்கறுத்த -
மொய்ம்பின்மதவலி, போர்மிகுபொருந - குரிசிலெனப்
பல, யானறியளவையி - னேத்தியானாது, நின்னளந்தறிதல் -
மன்னுயிர்க்கருமையி, னின்னடியுள்ளி - வந்தனனின்னொடு,
புரையுநரில்லாப் - புலமையோயெனக், குறித்தது மொழி
யா - வளவையிற்குறித்துடன், வேறுபல்லுருவிற் - குறும்ப
ல்கூளியர், சாறயர்களத்து - வீறுபெறத்தோன்றி, யளியன்
றானே - முதுவாயிரவலன், வந்தோன்பெருமநின் - வண்புக
ழ்நயந்தென, வினியவுநல்லவு - நனிபலவேத்தித், தெய்வஞ்
சான்ற - திறல்விளங்குருவின், வான்றோய்நிவப்பிற் - றான்வ
ந்தெய்தி, யணங்குசாலுயர்நிலை - தழீஇப்பண்டைத்தன், ம
ணங்கமழ்தெய்வத் - திளநலங்காட்டி., யஞ்சலோம்புமதி -
யறிவனின்வரவென, வன்புடைநன்மொழி - யளைஇவிளிவி
ன், றிருணிறமுந்நீர் - வளைஇயவுலகத், தொருநீயாகித் - தோ
ன்றவிழுமிய, பெறலரும்பரிசி - னல்குமதிபலவுடன், வேறு
பஃறுகிலி - னுடங்கியகில்சுமந், தாரமுழுமுத - லுருட்டிவே
ரற், பூவுடையலங்குசினை - புலம்பவேர்கீண்டு, விண்பொரு
நெடுவரைப் - பரிதியிற்றொடுத்த, தண்கமழ்மலரிறால் - சிதைய
நன்பல, வாசினிமுதுசுளை - கலாவமீமிசை, நாகநறுமல - ரு
திரயூகமொடு, மாமுகமுசுக்கலை - பனிப்பப்பூநுத, லிரும்பி

டிகுளிர்ப்ப - வீசிப்பெருங்களிற்று, முத்துடைவான்கோடு - தழீஇத்தத்தற்று, நன்பொன்மணிநிறங் - கிளரப்பொன்கொழியா, வாழைமுழுமுத - றுமியத்தாழை, யிளநீர்விழுக்குலை - யுதிரத்தாக்கிக், கறிக்கொடிக்கருந்துணர் - சாயப்பொறிப்புற, மடநடைமஞ்ஞை - பலவுடன்வெரீஇக், கோழிவயப்பெடை - யிரியக்கேழலொ, டிரும்பனைவெளிற்றின் - புன்சாயன்ன, குரூஉமயிரியாக்கைக் - குடாவடியுளியம், பெருங்கல்விடரளைச் - செறியக்கருங்கோட், டாமாநல்லேறு - சிலைப்பச்சேணின், றிழுமெனவிழிதரு - மருவிப், பழமுதிர்சோலை - மலைகிழவோனே.

இதன்பொருள்.

சிறுதினைமலரொடுவிரைஇமறியறுத்து - சிறியதினையரிசியைப் பூக்களோடேகலந்து பரப்பரிசியாகவைத்து மறியையறுத்து— வாரணக்கொடியொடு வயிற்படநிறீஇ - கோழிக்கொடியோடே தானவ்விடத்தேநிற்கும்படிநிறுத்தி— ஊரூர்கொண்ட சீர்கெழுவிழவினும் - ஊர்தோறு மூர்சோறுமெடுத்துக்கொண்ட தலைமைபொருந்தியவிழாவின்கண்ணும்— ஆர்வலரேத்த மேவருநிலையினும் - தன்மேலன்புடையா ரேத்துதலாலே தன்மநம் பொருந்துதல்வருகின்றவிடத்தினும்— வேலன்றைஇயவெறியயர்களனும் - படிமத்தானிழைத்தவெறியாடுகளத்தினும்— பிள்ளையார்வேலைத்தனக்கடையாளமாகக்கொண்டுதிரிதலின் வேலனென்றார். இது வெறியறிசிறப்பின் வெவ்வாய்வேலன் எனப்புறத்திறங்கூறியது. காடுங்காவுங்கவின்பெறுதுருத்தியும் - காட்டினும்பொழிலினுமழகுபெறுகின்ற வாற்றிடைக்குறையினும்— யாறுங்குளனும் - ஆறுகளினுங்குளங்களினும்— வேறுபல்வைப்பும் - முற்கூறியவூர்களினன்றி வேறுபட்ட பலவாகிய வூர்களினும்— சதுக்கமும் - நாற்சந்தியினும்— சந்தியும் - முச்சந்தியினுமைஞ்சந்தியினும்— புதுப்பூங்கடம்பும் - புதியபூக்களையுடைய

கடம்பினும்— மன்றமும் - ஊர்க்குநடுவா யெல்லாருமிருக்கு
மரத்தடியினும்— பொதியினும் - அம்பலத்தினும்— கந்து
டை நிலையினும் - ஆதீண்டு குற்றியையுடைய விடத்தினும்—
மாண்டலைக் கொடியொடமைவரமண்ணி - மாட்சிமைப்ப
ட்ட தலைமையினையுடைய கோழிக்கொடியோடே யுருகெழு
வியனகரை யமைவரப்பண்ணி— ஓடு - வேறுவினையொடு—
இனியாண்டலைக்கொடியென்றுபாடமாயிற் பேய்முதவியன
பலிதுகராமற் றலையாண் மகன்றலையுமுடல் புள்ளின் வடிவு
மாக வெழுதின கொடியென்க. நெய்யொடையவியப்பி -
நெய்யோடே வெண்சிறுகடுகையுமப்பி— ஐதுரைத்து - தா
ன் வழிபடுதற்குரிய மந்திரத்தைத் தோன்றும லுச்சரித்து—
குடந்தம்பட்டு - வழிபட்டு—வணக்கம்பட்டென்றுமுரைப்ப
ர். குடவென்பது - தடவென்பதுபோல வளைவையுணர்த்து
வதோருரிச்சொல்லடியாகப்பிறந்த பெயருமாம் குடந்தமா
வது: நால்விரன்முடக்கிப்பெருவிரனிறுத்தி நெஞ்சிடைவை
ப்பது குடந்தமாகும். கொழுமலர்சிதறி - அழகிய மலர்களை
த்தூவி— முரண்கொணருவி னிரண்டுடனுடீஇ - தன்னிற்
பகைத்தல்கொண்ட வடிவினையுடையவிரண்டுடையை யுள்
ளொன்றும் புறம்பொன்றுமாகவுடுத்து— செந்நூல் யாத்
து - சிவந்த நூலைக்கையிலேகாப்புக்கட்டி— நூலொழுக்கியெ
ல்லைப்படுத்தென்றுமாம். வெண்பொரிச்சிதறி - வெள்ளிய
பொரியைத்தூவி— மதவலிநிலைஇயமாத்தாட்கொழுவிடை -
மிகுதியையுடைய வலிநிலைபெற்றபெருமையையுடைத்தாகிய
காலையுடைய கொழுவியகடாவினது— குருதியொடுவிரைஇ
ய தூவெள்ளரிசி - உதிரத்தோடேபிசைந்த தூயவெள்ளரிசி
யை— சில்பலிச்செய்து - சிறுபலியாகவிட்டு— பல்பிரப்பி
ரீஇ - பலவிதத்துப் பிரப்பும்வைத்து— இனிபிரப்பு - பிரப்
புக்கூடையென்பாருமுளர். சிறுபசுமஞ்சளொடுநறுவிரை
தெளித்து - சிறிய பசுமஞ்சளோடே நறியசந்தநமுதலியவ
ற்றையுந்தெளித்து— இனி சிறுபசுமஞ்சள் - மஞ்சளிலொ

ருசாதிவிசேடமுமாம். விரை - ஆகுபெயர். பெருந்தண் க
ணவீரமாலை - பெரியகுளிர்ந்தசெவ்வலரிமாலையையும் — நறு
ந்தண் மாலை - ஒழிந்தநறியகுளிர்ந்தமாலைகளையும் — அறுத்து -
தலையொக்கவறுத்து — துணையறத்தூங்கநாற்றி - தனக்கொ
ப்பில்லாதபடி யசையத்தூக்கி — இனி தனித்தனியிணையொக்
கவறுப்பாகவறுத்தென்றுமாம். நளிமலைச்சிலம்பி னன்னகர்
வாழ்த்தி - செறிந்தமலைப்பக்கத்திலுள்ள நல்லவூர்களைப் ப
சியும்,பிணியும்,பகையுநீங்குகவென்றுவாழ்த்தி — நகர் - பிள்
ளையார்கோயிலென்றுமாம். நறும்புகையெடுத்து - நறியதூ
பங்கொடுத்து — குறிஞ்சிபாடி - அந்நிலத்திற் கடைத்தகுறி
ஞ்சிப்பண்களைப்பாடி — இமிழிசையருவியொடின் னியங்க
றங்க - முழங்குகின்ற வோசையினையுடைய வருவியோடே
யினியபல்லியங்களுமொலியாநிற்க — உருவப்பல்பூத் தூஉ
ய்வெருவரக்குருதிச்செந்தினைபரப்பி - சிவந்த நிறத்தினையு
டைய பலபூக்களையுந்தூவி யச்சம்வரும்படி யுதிரமளைந்த
சிவந்ததினையினையும்பரப்பி — குறமகண்முருகியநிறுத்துமு
ரணிநருட்கமுருகாற்றுப்படுத்தவுருகெழுவியநகர் - குறச்சா
தியாகியமக்கள் முருகனுவக்கும்வாச்சியங்களைவாசிக்கப்பண்
ணித் தெய்வமின்றென்பாரஞ்சும்படியாகப்பிள்ளையார்வரு
ம்படி வழிபடுத்தின வச்சம்பொருந்தின வகற்சியையுடைய
நகரின் கண்ணே — வேலன் வெறியாட்டயர்ந்தவென் புழிச்
சிறுபான்மையேனையொருமாடுவவொன்றலிற்குறமகள் வெ
றியாட்டுக்கூறினார். குறமகண்மஞ்ஞணியப்பியுரைத்துப்ப
ட்டுச்சிதறியுடை இயாத்துச்சிதறிச் செய்திரீஇத்தெளித்து நாற்
றிவாழ்த்தியெடுத்துப்பாடிக்கறங்காநிறகத் தூய்ப்பரப்பிநி
றுத்திபாற்றுப்படுத்தநகரெனவினைமுடிக்க. இது சாந்திசெ
ய்யவாற்றுப்படுத்தார். ஆடுகளஞ்சிலம்பப்பாடி - அவ்வெ
றியாடுகின்றகளமாரவாரிப்பவதற்கேற்பனவற்றைப்பாடி —
கோடுபலவுடன்வாய்வைத்து - கொம்புகள்பலவற்றையுஞ்சே
ரவூதி — கொடுமணியியக்கி - கொடியமணியையுமொலிப்பி

த்து — ஓடாப்பூட்கைப்பிணிமுகம்வாழ்த்தி - கெடாத வலியி
னையுடைய பிணிமுகமென்னும் பட்டத்தினையுடைய யானை
யைவாழ்த்தி— பிணிமுகம் - மயிலுமாம் வேண்டுநர் வேண்
டியாங்கெய்தினர்வழிபட - காரியங்களைவிரும்புவார்தாங்கள்
விரும்பின காரியங்களை விரும்பினாற்போலப்பெற்றுநின்று
வழிபட— நகரிலேபொடுவைத்தி க்கிவாழ்த்தி வழிபடவுறை
தலுமுரியனென்க. விழவின்கண்ணும் வேலின்கண்ணுங்கந்
துடைநிலையின் கண்ணுமுறைதலுமுரியனென்க ஆண்டாண்
டுறைதலும், களனுங்காடுங்காவுந்துருத்தியும் ஆறுங்குளனு
ம் வைப்புஞ் சதுக்கமுஞ் சந்தியுங் கடம்புமன்றமும் பொ
தியிலுமாகியவிடங்களிலேயுமுறைதலுமுரியனென்க அறிந்
தவாறே - யானறிந்தபடியே கூறினேன்— ஆண்டாண்டா
யினுமாக - யான்முற்கூறியவிடங்களிலேயாயினுமாகப் பிற
விடங்களிலே யாயினுமாக— உம்மை - ஐயவும்மை - முந்
துநீகண்டுழிக்காண்டகமுகனமர்ந்தேத்தி - முற்பட நீகண்ட
பொழுதழகுதனக்கிருக்கும்படிமுகனமர்ந்து துதித்து—முக
னமர்ந்தென்றார் - அவன்றெய்வத்தன்மையைக் கண்டபொ
ழுதச்சம்பிறவாதுநிற்க வேண்டுமென்றற்கு கைதொழூஉப்
பரவி முன்னர்த்தன்கையை தலைமேலே வைத்து வாழ்த்தி—
காலுறவணங்கி - பின்னர்த்திருவடி தலையிலேயுறும்படிதெ
ண்டனிட்டு— நெடும்பெருஞ் சிமயத்து நீலப்பைஞ்சுனை -
நெடிய பெரிய விமவானுச்சியிற் றருப்பைவளர்ந்த பசிய
சுனையிடத்தே— நீலமென்றார் - நீலநிறத்தையுடைய தருப்
பையை - அது - ஆகுபெயர் - என்றது - சரவணப்பொய்
கையென்றவாறு ஐவருளொருவனங்கையேற்ப - விசும்பு
ம் வளியுந் தீயுநீருநிலனுமாகிய வைவருட்டச்தன்னங் கையி
லேயேற்ப— சதாசிவனு மகேசுரனுமுருத்திரனு மரியு ம
யனும் பூதங்கட்குத் தெய்வமாக வினைவருளொருவனென்று
ர் - அவருளொருவனென்றதுருத்திரன்றெய்வமாகிய தீயை -
அவனங்கையேற்றலென்றது - இறைவனிடத்துநின்று மி

ந்திரன் வாங்கிய கருப்பத்தினை முநிவர்வாங்கித்தமக்குத் தரிக்க லாகாமையினிறைவன் கூறுகியமுத்தீக் குண்டத்திட்டவதனைக்கூறிற்று. அறுவர்பயந்த வாறமர்செல்வ - அருந்ததியொழிந்த வறுவராலே பெறப்பட்ட வாறுவடிவுபொருந்தியசெல்வ — என்றது - அங்ஙனமங்கியின் கணிட்டுச் சத்திகுறைந்த கருப்பத்தை முநிவரெழுவரும்வாங்கித் தம்மனைவியர்க்குக்கொடுப்ப வருந்ததியொழிந்தோர் வாங்கிவிழுங்கிச்சூன்முதிர்ந்து சரவணப்பொய்கையிற் பதுமப்பாயலிலேபெற்றுறுவகை வடிவாக வளர்ந்தமைகூறிற்று - இயற்கையினுலேயறுவராற் பைஞ்சுனையிலே பயக்கப்பட்டசெல்வனென்க இதுபரிபாடலிற்பாவிரும்பணிக்கடலென்னும்பாட்டானுணர்க. ஆல்கெழுகடவுட்புதல்வ - கல்லாலின்கீழிருந்த கடவுளினுடையபுதல்வா — கடவுளெனவுயர்திணையாய்நில்லாது. கடவுளென்பது தெய்வமென்னும் பொருட்டாயஃறிணை முடிபுகொள்ளு முயர்திணையாய் நிற்றலினஃறிணைப்பாற்பட்டுணரக்கூறியவென்னும் புறநடையான்முடிந்தது. மால்வரைமலைமகன்மகனே - பெருமையையுடைய மலையாகிய மலைபரையன்மகளுடையமகனே — வரை - மூங்கிலுமாம். மாற்றோர்கூற்றே - பகைவர்க்குக்கூற்றுவனே — வெற்றிவெல்போர்க்கொற்றவைசிறுவ - வெற்றியையுலகத்திற்குக்கொடுக்குந்துற்கையினுடையபுதல்வனே — வெல்போர்க்கொற்றவை - தான் வெல்லும்போரைச்செய்யுங்கொற்றவை - என்றது - மகிடனைச்செற்றதனை இழையணிசிறப்பிற்பழையோள்குழவி - பூணணிந்ததலைமையினையுடைய காடுகிழாளுடைய குழவி— காடுகிழாளென்பதக்காலத்துக் காடுகாளெனமருவிற்று. அவளுமிறைவனுடையசத்தியாகலினவளுடைய குழவியென்றார். வானோர்தானைத்தலைவ - தேவர்க்கள்படைத்தலைவ— என்றது - தேவர் சேநாபதியென்பதாம். வணங்குவில் - வளையும்வில்லையும்— தேவராகியதானையையுமுடையதலைவனென்க. மாலைமார்ப - இன்பத்துக்குரியமாலையணிந்தமா

ர்ப— நூலறிபுலவ - எல்லா நூல்களையுமறியும்புலவ· பலவ
ன் - அறிவுடையவன்· செருவிலொருவ · போ த்தொழிலி
லொருவனாகிநிற்பாய்— பொருவிறன்மள்ள - பொருகின்ற
வெற்றியினையுடையமள்ள— மள்ளனிளமைப்பருவத்தான்·
அந்தணர் வெறுக்கை · அந்தணருடையசெல்வமாயிருப்பா
ய்— அறிந்தோர்சொன்மலை - சான்றோர் புகழ்ந்து சொல்
லப்படுஞ்சொற்களினீட்டமாயிருப்பாய்— மங்கையர் கண
வ - தெய்வயானையாரும்வள்ளிநாச்சியாருமாகியமகளிர்க்கு
க்கணவ— மைந்தரேறே - வீரத்திடபமே— வேல்கெழுத-
க்கைச்சால் பெருஞ்செல்வ - வேல்பொருந்தின பெருமை
யையுடையகையான மைந்தபெரியசெல்வ— என்றது - வே
ல்வெற்றியாற்பெற்றசெல்வத்தை - குன்றங் கொன்றகுன்று
க்கொற்றத்துக்கிழவ - குருகாற்பெயர்பெற்றமலையைப்பிள
ந்தகுறையாதவெற்றியையுடையகிழவ — விண்பொருநெடு
வரைக்குறிஞ்சிக்கிழவ - தேவருலகத்தைத்தீண்டுநெடியவரை
களையுடையகுறிஞ்சி நிலத்துக்குரிமையையுடையாய்— அத
ற்குரியனாதல் - சேயோன் மெய்வரையுலகமுமென்பதனானு
ணர்க· பலர்புகழ்நன்மொழிப் புலவரேறே - பலரும்புகழ்ந்
து சொல்லுநன்றாகிய சொற்களையுடையபரசமயத்தினுள்ளா
ர்க்கேற்றின்றன்மையையுடையவனே— என்றது · கல்விம
தத்தையுடையயானைபோல்வார்க்குச்சிங்கவேறுபோல்வாயெ
ன்றதாம் அரும்பெறன்மரபிற் பெரும்பெயர்முருக - பிற
ர்க்குப்பெறலரிய முறைமையினையுடைய பெரும்பொருளை
யுடைய முருக — பெறலருமெனமாறுக பெயர் பொரு
ள்பெற்றபெரும்பெயர்· பல்வகையிரீஇய·வெனவும், சொற்
பெயர்நாட்டமெனவும் வரும் பெரும்பொருளென்றது வீ
ட்டினை· நசையுநர்க்காற்றுமிசைபேராள - அவ் வீட்டைப்
பெறவேண்டுமென்று நச்சிவந்தார்க்கதனை நுகர்விக்கும்பெ
ரிய புகழையாளுதலையுடையாய் — பேரிசையெனமாறுக·
அலந்தோர்க்களிக்குஞ் சேஎய் - பிறராலிடுக்கப்பட்டுவர்

சேர்க்கருள்பண்ணுஞ் சேய் — மண்டமர் கடந்த நின் வென்றுடலைத்துப் பொலம்பூட்சேஎய் - மிக்குச் செல்கின்ற போர்களைமுடித்த வென்றுடுகின்ற நினது மார்பிடத்தே பொன்னாற்செய்த பேரணிகலன்களையணிந்த சேயென்க— பரிசிலர்த்தாங்கு முருகெழுநெடுவேள் - இரந்துவந்தோரை வேண்டுவனகொடுத்துப் பாதுகாக்குமுட்குதல் பொருந்திய நெடியவேளே — பெரியோரேத்தும்பெரும் பெயரியவுள் - தேவருமுநிவருமேத்தும் பெரிய திருநாமத்தை யுடைய தலைவனே — இயவுள் - கடவுளுமாம் - போர்மிகு மொய்ம்பிற் சூர்மருங்கறுத்தமதவலி - போர்த்தொழிலிலே மிகுகின்ற மொய்ம்பாலே சூரபன்மாவின் குலத்தையில்லையாக்கின மதவலியென்னும் பெயரையுடையாய் — பொருந - உவமிக்கப்படுவாய் — பொருவப்படுமவன் பொருந னென நின்றது. குரிசில் - தலைவனே — என யானறியளவையினானாது பல்வேத்தி - என்றியானறிந்து நினக்குக்கூறியவளவாலே நீயுமமையாதே பலவற்றையுங் கூறிப்புகழ்ந்து — நின்னளந்தறிதன் மன்னுயிர்க்கருமையின் - நின்றன்மையெல்லாமுற்றவளவிட்டறிதல்பல்லுயிர்க்கரிதாகையாலே— நின்னடி யுள்ளிவந்தனன் - நின்றிருவடியைப்பெறவேண்டுமென்று நினைந்து வந்தேன் — நின்னொடு புரையுநரில்லாப் புலமையோய் - நின்னோடொப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தையுடையோய் — எனக்குறித்தது மொழியாவளவையில் - என்றுசெல்வி நீகருதிய வீடுபேற்றினை விண்ணப்பஞ் செய்வதற்கு முன்னே — முந்துநீ கண்டுழி முகனமர்ந்து - மகனே, கூற்றே, சிறுவ, குழவி, வெறுக்கையாய், சான்மலையாயிருப்பாய், மைந்தரோரே, புலவரோரே, சேயே, வேளே, இயவுளே, மதவலி, புலமையோயென்று முன்னெதிர்முகமாக்கியேத்தி யன்மை விளியல்லாதனவற்றை முன்னர்க்கூட்டி முடிக்க அங்ஙன மெதிர்முகமாக்கியேத்தியபின்னர் பரவி, வணங்கி, செல்வ, புகல்வ, சிறுவ, தலைவ, மார்ப, புலவ, ஒருவ, மள்ள, கணவ, செல்வ, கிழவ,

பொருந, முருக, இசைபேராள, வென்றண்மையாகவிளித்து மன்னுயிர்க்கருமையின் யானறியளவையி னேத்திநின்னடியுள்ளிவந்தனனென் றுநீகுறித்ததுமொழியாவளவையின்னமுடிக்க· வேறுபல் லுருவிற்குறும் பல்கூளியருடன்குறித்து - வேறுவேறாகி பலவ உவினையுடைய சிறியபலராகிய சேவித்துநிற்பார்சேரக்கருதி — நிலைகூர்ச்சல்லம்பிற்சொடுயிறற்கூளியரொன்றூர்பிறரும் - சாறயர்களத்துவீறுபெறத்தோன்றி - திருவிழாவெடுத்த களத்தேகாங்கள் பொலிவுபெறத்தோன்றி — முதுவாயிரவலன்றுளிபன் - அறிவுமுதிர்ந்த வாய்மையை யுடையபுலவன்றுனளிக்கத்தக்கான் — பெருமநின்வண்புகழ்நயந்தினியவுநல்லவுநனிபலவேத்திவந்தோனெனை - பெருமநினதுவளவியபுகழ்கூற விரும்பிக்கேட்டோர்க் கினியனவுமுறுதிபயப்பனவுமாகமிக்கபலவற்றை வாழ்த்திவந்தோனென்றுகூற — கூளியர்குறித்துத்தோன்றியளியன் பெருமநின்வண்புகழைக் கூறநயந்தினியவுநல்லவுமாக வேத்தி வந்தோனென்றுகூற வெனமுடிக்க தெய்வஞ்சான்றதிறல்விளங்குருவின் - தெய்வத்தன்மையமைந்தவலிவிளங்கும் வடிவினையும் — வான்றோய்நிவப்பிற்றான்வந்தெய்தி - வானைத்தீண்டுமுயர்ச்சியினையுடையதான்வந்தணுகி — அணங்குசாலுயர்நிலைதழீஇ - வருத்தமமைந்த தெய்வத்தன்மையை யுள்ளடக்கிக்கொண்டு — பண்டைத்தன் மணங்கமழ் தெய்வத் திளநலங்காட்டி - மணநாறுகின்றதெய்வத்தன்மையையுடைய முன்புண்டாகியதன் னிளையவடிவைக்காட்டி — மணங்கமழ்தெய்வத்துப்பண்டைத்தன் னிளநலங்காட்டியெனமாறுக. நின்வரவறிவலஞ்சலோம்புமதியென - நீவீடுபெறநினைத்துவந்தவரவையான் முன்னேயறிவனதுநினக் கெய்தலரிதென்றஞ் சுதலைப்பரிகரியென்று — அன்புடைநன்மொழியளைஇ - நின்மேலன்புடைத்தாகிய நல்லவார்த்தையைப்பலகாலு மருளிச்செய்து — இருணிறமுந்நீர்வளைஇயவுலகந் தொருநீயாக விளியின் றுதோன்ற - இருண்ட நிறத்தையுடையகடல்சூழ்ந்தவு

லகத்திடத்தே நீயொருவனே பிறர்க்குவீடளித்தற்குரியையாய்
க்கேட்கத் தக்கதோன்றும்படி — விழுமிய பெறலரும்பரிசின
ல்குமதி - சீரிய பிறராற் பெறுதற்கரிய வீடுபேற்றினைத் தருவ
ன் — இருழுஞ்சின்னு மேனியிடத்தொடுந், தகுநிலையுடைய
வென்மனார்புலவர் - என்பதனுளவ்வவசொல்லிற்கேற்னும்
புறனடையதனுள் - மதிபடர்க்கைக்கண்வருதல்கொள்க இ
னி மதிபலவுடனெனக்கூட்டிப் பரிவுகள்பலவுடனே பரிசினல்
குமென்றுகூறுவாருமுளர். வேறுபஃறுகிலிற் பலவுடனுடங்
கி - வேறுபட்டபலவாகிய துகிற்கொடிகளைப்போலத்தாமபல
வுங்கூடவசைந்து — அகில்சுமந்தாரமுழுமுதலுருட்டி - அகி
லைமேற்கொண்டு சந்தனமாகியபெரியமரத்தைத்தள்ளி — வே
ரற்பூவுடையலங்குசினைபுலம்பவேர்கீண்டு - சிறுமூங்கிலின
து பூவுடைத்தாயசைகின்ற கொம்புதலைப்பவேரைப்பிளந்
து — விண்பொருநெடுவரைப்பருதியிற் றொடுத்ததண்கமழ
லரிறால்சிதைய - தேவருலகத்தைத்தீண்டுகின்றநெடியமலையி
டத்தே ஞாயிற்றின்மண்டிலத்தைப்போல்வைக்கப்பட்டகண்
ணியவாய்மணக்கின்றபெருத்ததேன்கூடுகெட — நன்பலவா
சினிமுதுசுளைகலாவ - நன்றாகிய பலவாசினிகளுடையமுற்றி
யசுளைதன்னிடத்தேகலக்க — மீமிசைநாகநறுமலருதிர - மலை
யினுச்சியினுண்டானசுரபுன்னையினறியமலர்களுதிர — யூ
கமொடுமாமுகமுசக்கலைபனிப்ப - கருங்குரங்கோடே கரு
மை யையுடைத்தாகிய முகத்தையுடையமுசக்கலைகளுநடுங்
க — கலைபென்காட்சியுறைக்நமூரித்தே - நிலையிற்றப்பெயர்
முசுவின்கண்ணும். என்றார். பூநுதலிரும்பிடிகுளிர்ப்பவீசி -
புகரையணிந்த மத்தகத்தையுடையபெரியபிடி குளிரும்படி
வீசி — பெருங்களிற்று முத்துடைவான்கோடுதழீஇ - பெ
ரியயானையினுடைய முத்தையுடைத்தாகிய வெள்ளிய கொம்
புகளையுள்ளடக்கி — நன்பொன்மணிநிறங்கிளரத்தத்துற்று.
நல்லபொன்னுமணியுநிறம்விளங்கும்படி மேலேகொண்டுத
தித்து — பொன்கொழியா - பொடியானபொன்னைத்தெள்

ளி — வாழைமுழுமுத றுமியத்தாழை யிளநீர்விழுக்குலை யுதிர
த்தாக்கி - வாழையினது பெரிய முதறுணியத் தெங்கினதிள நீ
ராயுடைய சிறிய குலையுதிர வவ்விரண்டினையுமோதி — கறிக்
கொடிக்கருந்துணர்சாய - மிளகினது கொடியின் கரிய கொ
த்துக்கள்சாய — பொறிப்புறமடநடை மஞ்ஞைபலவுடன்வெ
ரீஇக் கோழிவயப்பெடையிரிய - பீலியையுடைத்தாகிய விட
த்தினையு மடப்பத்தையுடைத்தாகிய வொழுக்கத்தினையு முடை
ய மயில்களோடே கோழியினுடைய வலியையுடையபெடை
வெருவிப்பலவுஞ் சேரக்கெட — கேழலொடிரும்பனை வெ
ளிற்றின்புன்சாயன்ன குரூஉமயிரியாக்கைக் குடாவடியுளியம்
பெருங்கல்விடரளைசெறிய - வெளிற்றினிரும்பனையெனமா
றுக - ஆண்பன்றியுடனே யுள்ளேவெளிற்றினையுடைத்தாகி
ய கரியபனையினதுபுல்லியசெறும்பையொத்தகரியநிறத்தை
யுடைத்தாகிய மயிரினையுடைய வுடம்பினையும் வளைந்தவடியி
னையுமுடைய கரடிபெரியகல்லின்முழையிலே சேர — கரு
ங்கோட்டாமாநல்லேறு சிலைப்ப - கரியகொம்பினையுடையவா
மாவினுடைய நன்றாகியவேறுகணைமுழங்க — சேணின்றிழு
மெனவிழிதருமருவி - மலையினுச்சியினின்று மிழுமென்னு
மோசைபடக்குதிக்கு மருவியையுடைய — பழமுதிர்சோலை
மலைகிழவோனே - பழமுற்றின சோலைகளையுடையமலைக்கு
ரிமையையுடையோனே — நுடங்கி - சுமந்து - உருட்டி -
கீண்டு - சிதைய - கலாவ - உதிர - பனிப்ப - வீசி - தழீஇ - தத்
துற்று - கொழிபா - தாக்கி - சாய - இரிய - செறிய - சிலைப்
ப - இழியுமருவியெனமுடிக்க - கிழவோனென்ற பெயருட
ம்பொருபுணர்த்தலொற்கொள்க - கணவன் - மார்பினன் - செ
ன்னியனாகிய சேயுடைய சேவடிபடரு முள்ளத்தோடே செ
ல்லுஞ் செலவினை நீநயந்தனையாயினன்னர்நெஞ்சத்தின்னி
சைவாய்ப்பவின்னேபெறுதியதுபெறுதற்கவன்யாண்டுறை
யுமெனிற்குன்றமர்ந்துறைதலுமுரியன் - அதுவன்றி - அலை
வாய்ச்சேறலு நிலையியபண்பு - அதுவன்றி - ஆவினன்குடி

யசைதலுமுரியன் - அஃதுவன்றி - ஏரகத்துறைதலு முரியன்
அதுவன்றி - குன்றுதோறாடல் நின்றதன்பண்பு - அதுவன்
றி - விழவின்கண்ணும் - நிலையின்கண்ணும் - கந்துடைநிலை
யின்கண்ணு முறைதலுமுரியன் - களனுங்காடு முதலியன
வாண்டாண்டுறைதலு முரியன் - நகரிலே - பாடி - வைத்து
இயக்கி - வாழ்த்தி - வழிபடவுறைதலுமுரியன் - இஃதியான
றிந்தபடியேகூறினே னினியாண்டாண்டாயினுமாகப்பிற
விடங்களிலேயாயினுமாக - முந்துநீகண்டுழி முகனமர்ந்து
முன்னெதிர்முகமாக்கி யேத்திப்பரவிவணங்கிப்பின்னரான்
மையாக விளித்தியானறியளவையினேத்தி நின்னடியுள்ளிவ
ந்தனனென்று நீகுறித்ததுமொழிவதற்கு முன்னே - கூளிய
ர்குறித்துத்தோன்றிப் பெருமவிரவலனளிக்கத் தக்கான்வந்
தோனென்றுகூற - மலைகிழவோனாகியகுரிசிலுந்தான்வந்தெ
ய்தி தழீஇக்காட்டி யஞ்சலோம்புமதியென்றன்புடைத்தாதன்
மொழிபளைஇ பொருநீயாகத்தோன்றும்படிபெறவரும்பரி
சினக்குவனைவீடுபெறக்கருதியவிரவலனை நோக்கிவீடுபெ
ற்றொருவனாற்றுப்படுத்ததாக்கி வினைமுடிபுசெய்க - இது
புறத்திணையியலுட்டாவினல்லிசையென்னுஞ் சூத்திரத்துளா
ற்றிடைக்காட்சி யுறழத்தோன்றிப் பெற்றபெருவளம்பெறா
ர்க்கறிவுறீஇச்சென்றுபயனெதிரச்சொன்னபக்கமும் - ன்
ன்பதனுள் முற்கூறியகர்த்திழியைப்பெற்றொருவனதனைப்
பெறாதொருவனுக்குப் பெறுமாறுகூறியவதனை வழிபடு
த்தக்கூறுவனென்பதுபற்றிச்செய்யுட்செய்ததாயிற்று - க
ர்த்திழியாவதொருபற்றுமற்றொருவாறருவாய்த்தானே நிற்குந்
தத்துவங்கடந்த பொருளதுசார்பினாற்றோன்றுதுதானருவா
யமைதிர்சுடரொன்பதாம் - இதனை யுற்ற வாக்கையினுறுபொ
ருணறுமலரெழுதருநாற்றம்போற் - பற்றலாவதோர் நிலையி
லாப்பரமபொருளெனவதனை யுணர்ந்தோர்கூறியவாற்றனு

னர்க - முருகாற்றுப்படையென்பதற்கு - வீடுபெறுதற்குச்
சமைந்தாரோரிரவலனை வீடுபெற்றானொருவன் முருகனிடத்
தேயாற்றுப்படுத்ததென்று பொருள்கூறுக.

வெண்பா

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான் பொற்பாதங்
கரங்கூப்பிக்கண் குளிரக்கண்டு - - - சுருங்காத
வாசையானெஞ்சேயணிமுருகாற்றுப்படையை - ப்
பூசையாக் கொண்டேபுகல். - - - - - - *

திருமுருகாற்றுப்படை முற்றிற்று.

சிறப்புப்பாயிரம்

கலித்துறை.

முருகன்றிருவடிக்கன்பாகவாற்றுப்படைமொழிந் - - தே
வருகன்மசன்மமொழித்தா னக்கீர னவ்வால்பறுவ - த்
குருகன்பர்போற்ற வுரைவிரித்தானச்சிறார்க்குகந்தோ - ன்
பெருகன்னதச்சிட்டனன்சுப்பராயப்பெருந்தகையே. *

இஃது
புதுவை, வெள்ளைமுத்துமுதலியார் குமாரர்
பொன்னையாமுதலியார் சொல்லியது.